SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:3, Pages:56
OCTOBER-2023, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

அக்டோபர் 2023,
விலை ரூ.20/-



## திருமலையப்ப ஸ்வாமி
## நவராத்திரி பிரம்மோத்ஸவம்
## 2023, அக்டோபர் 15 முதல் 23 வரை



# திருச்சானூர்
# ஸ்ரீபத்மாவதி தாயார்
# பிரம்மோத்ஸவம்

**2023, நவம்பர் 10 முதல் 18 வரை**

**10-11-2023 வெள்ளிக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

**11-11-2023 சனிக்கிழமை**
பகல் : பெரிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**12-11-2023 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**13-11-2023 திங்கட் கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

**14-11-2023 செவ்வாய்க்கிழமை**
பகல் : பல்லக்கு உற்சவம்,
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**15-11-2023 புதன் கிழமை**
பகல் : சர்வபூபால வாகனம்
தங்கத்திருத்தேர்
இரவு : கருட வாகனம்

**16-11-2023 வியாழக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**17-11-2023 வெள்ளிக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**18-11-2023 சனிக்கிழமை**
பகல் : சக்கர ஸ்நானம்
பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்

*கு$_3$ரூநஹத்வா ஹி மஹாநுப$_4$ாவாந்*
*ச்ரேயோ பே$_4$ாக்தும் பை$_4$க்ஷ்யமபீஹ லோகே।*
*ஹத்வார்த$_2$காமாம்ஸ்து கு$_3$ரூநிஹைவ*
*பு$_4$ஞ்ஜீய பே$_4$ாக$_3$ாந் ருதி$_3$ரப்ரதி$_3$க்$_3$த$_4$ாந்॥*



**மேன்மை பொருந்திய ஆசார்யர்களைக் கொல்வதை விட, இவ்வுலகில் பிச்சையெடுப்பதால் கிடைக்கும் அன்னத்தை உண்பதுகூட மேன்மையைத் தரும். ஏனெனில், ஆசார்யர்களைக் கொன்றாலும் இவ்வுலகில் இரத்தம் கலந்த செல்வம் காம்ய வஸ்துக்கள் – இவற்றின் வடிவிலுள்ள போகங்களைத்தான் அனுபவிக்கப்போகிறேன்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–5*



*வந்தாய்போலே வாராதாய் வாராதாய்போல் வருவானே*
*செந்தாமரைக் கண் செங்கனிவாய் நால்தோளமுதே! எனதுயிரே!*
*சிந்தாமணிகள் பகரல்லைப்பகல்செய் திருவேங்கடத்தானே!*
*அந்தோ! அடியேனுனபாதம் அகலகில்லேனிறையுமே*

கைக்கு எட்டினாற்போல் இருந்து எட்டாதவனே! எட்டாதவன் போலிருந்து கிட்டி நிற்பவனே! செந்தாமரை போன்ற திருக்கண்களையும், செங்கனி போன்ற திருப்பவளத்தையும், நான்கு திருத்தோள்களையுமுடைய பரம போக்கியனே! எனக்கு உயிரானவனே! சிறந்த ரத்னங்களின் ஒளியானது இரவையும் பகலாக்கும் இடமான திருமலையில் வாழ்பவனே! ஐயோ உனது திருவடிகளை அடிமைச் சுவடறிந்த நான் ஒரு க்ஷணகாலமும் பிரிந்திருக்க வல்லேனல்லேன்.

*- திருவாய்மொழி 6-10-9*

తిరుమల తిరుపతి దేవస్థానములు

# సప్తగిరి

సచిత్రమాసపత్రిక

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

तिरुमल तिरुपति देवस्थान

# सप्तगिरि

सचित्र मासिक पत्रिका

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS

# SAPTHAGIRI

ILLUSTRATED MONTHLY

ತಿರುಮಲ ತಿರುಪತಿ ದೇವಸ್ಥಾನಗಳು

# ಸಪ್ತಗಿರಿ

ಸಚಿತ್ರಮಾಸ ಪತ್ರಿಕೆ

तिरुमलतिरुपतिदेवस्थानम्

# सप्तगिरिः

सचित्रमासपत्रिका

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும்
ஆதரவு தன்னிகரற்றது!
தி.தி.தேவஸ்தானத்திற்கும்
வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான
"ஸப்த வர்ண"
சமய மாத இதழ்

# ஸப்தகிரி

(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)

**உங்கள் இல்லங்களுக்கே**
**அலர்மேல் மங்கை**
**உறை மார்பன்**
**மாதாமாதம் எழுந்தருளும்**
**அனுபூதியைப் பெறுங்கள்**




.....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

ஸப்தகிரி சமய மாத இதழுக்கு சந்தா
செலுத்துங்கள்...

திருமலையப்பனின் அக்ஷர பிரசாதமான
"ஸப்தகிரி"யை திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

அக்டோபர் 2023 மலர் 03 இதழ் 03


## உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| பக்தர்கள் சேவையில் தி.தி.தே. 24x7 -திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி. | 07 |
| திருமலையில் கருட சேவை -திரு. ரா.ஹரிசங்கர், கும்பகோணம். | 10 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம் திருவேங்கடத்தானை நாடி நறையூரில் கண்டேனே -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 11 |
| தயையே வடிவெடுத்த திருவேங்கடவனும் சுவாமி தேசிகனும் -திருமதி பிரேமா வரதன், புதுதில்லி. | 16 |
| பாலாஜி இருக்க பயமேன்? -திரு. ச. இராமதாசு, புதுச்சேரி. | 20 |
| ஏகாதசி - திரு. துளசி கிருஷ்ணா, சென்னை. | 22 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர். | 25 |
| திருமலையில் மாக்கள் செய்யும் சேவை - திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி. | 31 |
| என் உள்ளம் கவர் வேங்கடவா -திரு. ஆர். கண்ணன், பெங்களூரு. | 34 |
| திருவேங்கடவனின் திருவருள் - திரு. எம். எஸ்.ராகவன், திருவல்லிக்கேணி. | 37 |
| நவராத்திரியில் நற்தரிசனம் -திருமதி எஸ். திருவேணி, நங்கைநல்லூர். | 38 |
| வரகூர் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் கோயில் - திரு. எம். அசோக்ராஜா, திருச்சி. | 41 |
| திருமலை தெய்வமும் தியாகராஜ சுவாமியும் - திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத். | 43 |
| ராசிபலன்கள் : அக்டோபர் 2023 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 46 |
| சந்தேகம் தெளிவோம் - நாவல்பாக்கம் ஸ்ரீஉ.வே.வாஸுதேவாசார்யார், திருவனந்தபுரம். | 47 |
| நீதிக்கதை : முதலாழ்வார்கள் காட்டும் வழிகாட்டுதல் திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், அம்பத்தூர். | 48 |
| சித்திரக்கதை : தண்ணீர் தானே என நினைக்காதே! | 52 |



சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
“Sapthagiri”, T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


### வாசகர்களுக்கு...

*இவ்விதழ் நவராத்திரி பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் இடம்பெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.* -பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : கருட வாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.
பின்னட்டை : ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.

# நவராத்திரி நாயகன்

அனைத்து உயிர்களிலும் உறைந்திருப்பது தாயாரின் வடிவமே என்று மார்கண்டேய புராணமும், சக்தியில்லாமல் எதையும் செய்ய இயலாது என்று சங்கர பாஷ்யமும், இவ்வுலகமே அப் "பராசக்தி"யாக பரந்து விரிந்திருக்கிறாள் என்று யஜுர்வேதமும் போற்றுகின்றது. நம் சனாதன தர்மமும் பெண்கள் எங்கு பூஜிக்கப் படுகிறார்களோ அங்கு அனைத்து தேவதைகளும் கொலு வீற்றிருப்பர் என்று கூறுகின்றது. தாயாகவும், தாரமாகவும், சகோதரியாகவும், நல்வழியில் நடக்கக் கற்றுக் கொடுப்பதும் "பெண்" தான். எனவேதான் நம் முன்னோர்கள் பெண்களை தேவதையாக பாவித்து வணங்கி வந்தனர். ஜகன்மாதாவாக, ஆதிபராசக்தியாக, தன–தான்ய, சந்தான லக்ஷ்மியாக பெண் இனத்தை நாம் பூஜித்து வருகின்றோம். இந்த ஜகத்துக்கெல்லாம் அப்பிராட்டியே காரணம் எனப் போற்றுகின்றோம். அண்ட சராசரங்களையும் வழி நடத்துபவள் அத்தாயே ஆவாள்.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண் உள்ளாள் என்பதை அறிதல் வேண்டும். திருவேங்கடமுடையானும் தன் தேவியர்களை திருமார்பில் வைத்திருக்கிறார். பரம சிவனும் தன் பாதி உடம்பை பார்வதி தேவிக்கே அளித்துள்ளார். பெண் சக்தி இல்லையெனில் ஆண் சக்தி முழுமை பெறாது எனும் உண்மையைப் பறைசாற்ற, பெண்கள் மீது நாம் வைக்கும் கௌரவத்திற்கான சிறந்த உதாரணமாக இதைக் கொள்ளலாம். இவ்வளவு சிறப்பு வாய்ந்த பெண் சக்திக்கென்றே கொண்டாடப்படுவதுதான் நவராத்திரி விழாவாகும். தனதான்யத்திற்கு மட்டுமின்றி சௌபாக்கியத்திற்கும் அடையாளமாகத் திகழ்பவள் "துர்கா தேவி". துன்பத்தினை நிர்மூலமாக்கும் சர்வ சக்தி படைத்த அந்த துர்கா தேவியை இந்நவராத்திரியில் வணங்குவோம்.

கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவனுக்கும் இந்நவராத்திரியில் வெகு வைபவமாக பிரம்மோத்ஸவம் நடைபெறும். அதிக மாதம் வராத ஆண்டுகளில் திருவோண நட்சத்திரமும் நவராத்திரியும் சேர்ந்தே வரும். அப்பொழுது ஒரு பிரம்மோத்ஸவம் மட்டுமே நடைபெறும். இவ்வருடம் சாந்திரமானப்படி அதிக மாதம் வருவதால் புரட்டாசி திருவோணம், நவராத்திரி திருவிழா என இரு பிரம்மோத்ஸவங்கள் நடைபெறுகின்றன. திருவேங்கடவனுக்கு நடையெறும் பிரம்மோத்ஸவத்தை சேவிப்பதற்கு எங்கிருப்போரும் மழையையும் பொருட் படுத்தாமல் வருகின்றனர் என்று அன்னமய்யா தம் சங்கீர்த்தனையில் கீர்த்தித்துள்ளார். திருமழிசை ஆழ்வாரும் திருமலையப்பன் பிரம்மோத்ஸவப் பெருவிழாவைக் காண ஆவல் கொண்டதாக தன்னுடைய பிரபந்தத்தில் குறிப்பிடுகிறார். வேங்கடம் என்றாலே சகல பாபங்களையும் போக்கும் இடம் என்று பொருள். அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன். ஆதி அந்தம் அற்றவன். அயர்வறு அமரர்களுக்கு அதிபதியானவன். அவனை வணங்கினாலே போதும் கேட்ட வரங்களை அள்ளித் தருவான். வேண்டிக் கொண்டாலே போதும் வேதனைகளை வேரறுப்பான்.

திருவேங்கடமுடையானை எப்பொழுது தரிசித்தாலும் வரத ஹஸ்தம் வாழ்வினை செம்மையாக்கும். கடி ஹஸ்தம் நம்மை கரை சேர்க்கும். அந்த வரிசையிலே ஸ்வாமிக்கு பிரம்மாவே முன்னின்று பிரம்மோத்ஸவம் நடைத்துவதாக ஒரு ஐதீகம். அகில உலக நாயகனுக்கு நடைபெறும் இவ்வுற்சவத்திற்கு பக்த கோடிகள் திரண்டு வந்து கண்ணாரக் கண்டு களிக்கின்றனர். இவ்வுலகத்தார் மட்டுமன்றி அவ்வுலக தேவதைகளும், ரிஷிகளும், யக்ஷ, கின்னர, கிம்புருஷ கந்தர்வர்கள் முதலானோரும், மரம் செடி கொடிகளும், பூ பழங்களும், பஞ்ச பூதங்களும் எம்பெருமான் உத்ஸவத்தினை கண்டு ஆனந்திக்கின்றனவாம்.

இந்த உத்ஸவத்தில் பல்வேறு வாகன சேவைகள், நிரந்தர வேதகோஷம், எங்கு காணினும் அற்புதமான அலங் காரங்கள், பழம் புஷ்ப கண்காட்சிகள், திருமலையில் உள்ள நாதநீராஜன அரங்கம், ஆஸ்தான மண்டபம், திருப்பதியில் உள்ள அன்னமாசார்யா கலாமந்திரத்திலும், மஹதி கலையரங்கிலும் சங்கீதம், நாட்டியம், ஹரிகதை, பஜனை, சொற்பொழிவுகள் என கலைநிகழ்ச்சிகளும் நடக்கின்றன. இங்ஙனே உலகமுண்ட பெருவாயனுக்கு நடைபெறும் இவ்வுத்ஸவத்தில் ஸ்வாமி தனித்தும், உபயநாச்சிமார்களோடும் எழுந்தருளும் அலர் மேல் மங்கை மணாளனை தரிசித்தால் "போய பிழையும் புகு தருவான் நின்றனவும் தீயினில் இட்ட தூசாகும்" என்பதில் ஐயமில்லை.

வாருங்கள் பூவுலக நாயகனை சேவிப்போம்! பிறவாப் பேற்றினை பெறுவோம்!!



# பக்தர்கள் சேவையில் தி.தி.தே. 24/7



கலியுக தெய்வமான திருவேங்கடவனை ஏழு மலை வாசன் என்று அன்புடன் அழைப்பர். யுகங்கள், வருடங்கள், ருதுக்கள் எனப் பலவாறு காலங்கள் வகுக்கப்பட்டு இருந்தாலும் கோடைக்காலத்தில் நல்ல முகூர்த்தங்களும், விடுமுறையும் கலந்து வரும் போதும், உற்சவ காலங்களிலும் பக்தர்கள் யாத்திரைகள் மேற்கொண்டு வருவதும் நாம் அனைவரும் அறிந்த ஒன்று. யாத்திரை என்றாலே "நமக்குத் தேவையான வசதிகள் அங்குக் கிடைக்குமா?" என்று எண்ணத் தோன்றும். பண்டைய காலத்தில் யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்காக சத்திரங்கள், உணவு அளிக்கும் மையங்கள், நிழற்குடைகள் எனப் பொதுமக்களாலும், அந்தந்த ஆலயப் பராமரிப்பாளர்களாலும் செய்யப்பட்டு வந்தன.









பல லக்ஷக்கணக்கில் கோடைக்காலத்திலும், உற்சவ காலங்களிலும் பக்தர்கள் திருவேங்கடவனின் திருவருளுக்காக திருமலைக்குப் படையெடுத்து வருவதும் இயல்பான ஒன்று. லக்ஷக்கணக்கில் பக்தர்கள் வந்தாலும் அவர்கள் அனைவருக்கும் எந்தவித குறையும் இன்றி குழந்தைகளை பராமரிக்கும் அன்னையைப் போல தி.தி.தே. வசதிகளைச் செய்து வருகின்றது.






## நிம்மதிப் பெருமூச்சில் கோடை

கோடைக்காலத்தில் சுப முகூர்த்தங்களுடன் விடுமுறையும் சேரும் காரணத்தால் திருமலைக்கு வரும் பக்தர்களுக்கு தி.தி.தே. பலவிதமான வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. அலிபிரியிலிருந்து திருமலைக்கு பாத யாத்திரையாக வரும் பக்தர்களுக்கு இரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையத்திலிருந்து இலவசமாக அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு வரை பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மலையேறும் பக்தர்கள் கைகளில் தாங்கள் சுமந்து வரும் உடைமைகளை அங்குக் கொடுத்து விட்டால் அவை திருமலைக்கு வந்து சேர்ந்து விடும். பக்தர்களும் சுமையின்றி நடந்து சென்று திருமலையை அடையலாம். பக்தர்கள் நடக்கும் போது கோடை வெயில் மற்றும் மழைக் காலத்தில் இயற்கை இடையூறுகளிலிருந்து தற்காத்துக் கொள்ள மேற்கூரைகளும் அமைக்கப் பட்டுள்ளன. நடந்துச் செல்லும் வழியில் ஆங்காங்கே தண்ணீர் வசதியும் செய்யப் பட்டுள்ளது. நடந்துச் செல்லும் பக்தர்கள் அமர்ந்து இளைப்பாறிப் பின்னர் நடக்கும் விதமாக அமர்வு நாற்காலிகளும் ஆங்காங்கே அமைத்துள்ளனர். இயற்கை எழிலுடன் கூடிய திருமலை நடைபாதையில் ஆழ்வார்கள், ஹரிதாசர்கள், அனுமன் விக்ரகங்களும் அமைத்துள்ளனர்.






●●●

தெலுங்கு மூலம் : டாக்டர் கே.ரவிச்சந்திரன்,

(ஜூலை 2022 தெலுங்கு ஸப்தகிரி இதழிலிருந்து)

தமிழாக்கம் : திருமதி எஸ்.வைஷ்ணவி,

திருப்பதி.



திருமலையில் யாத்திரிகர்களுக்கு இலவச தங்கும் வசதி, இலவச அன்னப்பிரசாத மையம், இலவசப் பேருந்து... என தி.தி.தே. அளிக்கும் வசதிகள் ஏராளம். அவை சொல்லில் அடங்கா.



சாலிக்கிராமக் கற்களால் ஆன திருமலையில் ஸ்ரீமத்ராமாநுஜர், ஸ்ரீவியாசராஜ தீர்த்தர் போன்ற மகான்கள் தம் பாதங்களால் நடக்காமல் முழங்கால்களால் நடந்துச் சென்று திருமலையப்பனை தரிசித்தார்கள். பதகவிதை பிதாமகர் அன்னமாச்சாரியர் காலணிகள் அணிந்து திருமலை ஏறி வந்தார். அவர் காலணிகள் அணிந்த காரணத்தினால் திருமலை ஏற முடியவில்லை. சாக்ஷாத் பத்மாவதி தாயார் வந்து உணவினை அளித்து அந்தக் காலணிகளை அகற்றி மலை ஏறினால் உமக்கு ஸ்வாமி தரிசனம் கிடைக்கும் என்று கூறியதை அனைவரும் அறிந்ததே. இன்றும் திருமலையில் மாட வீதிகளில் யாரும் காலணிகள் அணிந்து செல்வதில்லை.

கோடைக்காலத்தில் அந்த மாட வீதிகளில் நடந்து வருவது மிகவும் கடினமான ஒரு விஷயமாகும். பக்தர்கள் கோடையிலும் சிரமமின்றி நடக்க வெள்ளை வண்ணத்தில் பெயிண்ட் பூசியும், இடைவிடாமல் தண்ணீர் ஊற்றியும், பட்டைகளை விரித்தும் பக்தர்கள் கால் புண்ணாகாமல் இருக்க தி.தி.தே. வழிவகை செய்துள்ளது. இச்செயலால் பக்தர்கள் மிகுந்த ஆனந்தமடைந்துள்ளனர்.



### ஜலப்பிரசாத மையங்கள்

தண்ணீர் என்பது ஆரோக்கிய சூத்திரத்தில் உடலைச் சுத்தம் செய்யும் மிக முக்கியமான ஒன்றாகும். பசியை அடக்கிக்கொண்டாலும் தாகத்தை அடக்க முடியாது. திருமலையில் குடிநீர் வசதி என்பது மிகுந்த முக்கியமான ஒரு வசதியாகும். அனைவருக்கும் சுத்திகரிக்கப்பட்ட ஆர்.ஓ. குடிநீர் கிடைக்கும் வகையில் ஜலப் பிரசாத மையங்கள் ஆங்காங்கே தி.தி.தே. ஏற்பாடு செய்துள்ளது. திருமலலையில் தண்ணீர் தானம் செய்வதும் புனிதமான சேவையாகும்.



### இரண்டாண்டுகளுக்குப் பின்னர்...

கொரோனா கடும் தாக்குதலுக்காக நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு சில சலுகைகள் இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 08 ஏப்ரல் 2022 அன்று இணையதளம் வாயிலாக டிக்கெட்டுகள் கொடுக்கப்பட்டு 09 ஏப்ரல் 2022 முதல் திருமலையப்பனின் தரிசனத்திற்கு வயதானவர்கள், நீண்ட நாளாக நோயினால் வாடும் பக்தர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான தரிசனம் அளித்து வருகிறது. திருமலை நம்பி ஆலயம் அருகில் அவர்களுக்கு மேற்கூரை அமைத்து அமர்வதற்கு நாற்காலிகள் அமைக்கப்பட்டு உணவு, தண்ணீர் வசதிகளையும் அளித்து இவர்களுக்கு என தி.தி.தே. தனியாக ஒரு வரிசை








அமைத்து தரிசனத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது. கை குழந்தைகளுடன் வரும் பெற்றோருக்கும் தனி வரிசையில் தரிசன வசதி செய்து வருகிறது.



## நந்தவனம்

திருமலைக்கு புஷ்ப மண்டபம் என்ற பெயர் உண்டு. ஸ்ரீராமாநுஜர் ஆணையின் பேரில் அனந்தாழ்வான் ஏரியைத் தோண்டி, நந்தவனத்தை அமைத்துத் திருமலையப்ப ஸ்வாமிக்கு புஷ்ப கைங்கர்யம் செய்த விஷயம் அனைவரும் அறிந்ததே. இந்த இடம் ஆலயத்தின் பின்புறம் இன்றும் தென்மேற்கு மாடவீதியில் நடந்து சென்றால் காணலாம். திருமலையப்பனுக்கு நடக்கும் சேவைகளில் புஷ்ப யாகம் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.நம்மாழ்வாரும் திருமலையை "சிந்துப்பூ மகிழும் திருவேங்கடம்" என்று பாசுரமிடுகின்றார். ஆதலால் திருமலையில் மலர்ந்த அனைத்து மலர்களும் திருமலையப்பனுக்கே என்பதால் அங்கு மலர் அணிந்து செல்வது கூடாது என்பர்.



கடும் கோடை தாக்கத்தினால் வாடும் யாத்திரிகர்களின் வருத்தத்தைப் போக்கி ஆனந்தமளிக்கும் வகையில் ஜி.எஸ். டோல்கேட் முதல் திருமலை வரை தி.தி.தே. நாற்பத்து மூன்று நந்தவனங்கள் பெரிய அளவிலும், சாலைகள் பிரியும் இடங்களிலும், அமைத்து உள்ளது. இதில் பந்தி, சாவியா, பெண்டிண்யா, ஜினியா மற்றும் பல மலர் செடிகள் அமைந்துள்ளன. பாட்டா கங்கம்மா அருகே பெரிய நந்தவனம் அமைந்துள்ளது. அதில் சாமாந்தி, அரளி, சம்பங்கி, மல்லி, துளசி, பன்னீர் இலை, கனகாம்பரம், ரோஜா போன்ற மலர்ச் செடிகளில் மலரும் மலர்களை திருமலையப்ப ஸ்வாமிக்கு சமர்ப்பிப்பர். இங்கு சங்கு, சக்கரம் போன்ற பல்வேறு வடிவங்களில் அமைந்துள்ள செடிகள் பார்வையாளர் கண்களுக்கு விருந்தாக அமைகிறது.



சேவை என்பது இரண்டு எழுத்து. அனுமனும், இலட்சுமணனும் ஸ்ரீராமருக்கு செய்தது சேவை. ஆழ்வார்களும் திவ்ய பிரபந்தங்களை அருளி எம்பெருமானுக்கு பாசுரங்களால் சேவை செய்தனர்.இராமாநுஜரும், ஆசார்ய புருஷர்களும் தங்களால் இயன்ற கைங்கர்யங்களை செய்து உள்ளனர். அன்னமய்யாவும் திருவேங்கடமுடையான் மீது பாடல்கள் இயற்றிப் பாடி கீர்த்தனைகளால் சேவை செய்தார். வேதம், உபநிஷத் போன்றவைகளும் சேவை குறித்துக் குறிப்புகளை நமக்கு அளிக்கிறது. அதன் வழியில் தி.தி.தே. பரிபூர்ணமாக புனிதமான இந்தச் சேவையை 24 மணி நேரமும் ஆண்டுதோறும் யாத்திரிகர்களுக்கு அளித்து வருகிறது. மேற்கூறிய சேவைகள் அல்லாமல் நமது திருக்கோயில், இலவச அன்னதான சேவை, இலவசப் பேருந்துகள் சேவை, இலவசமாக கல்யாணமஸ்து, இலவச புரோகித சங்கம் என்று சொல்லில் அடங்கா சேவைகளைச் செய்து வருகிறது. நாமும் அத்திருவேங்கடமுடையானுக்கு நம்மால் இயன்ற சேவைகளைச் செய்து அப்பரம்பொருளின் அருளைப் பெற்றிடுவோம்.










கருட சேவை என்பது விஷ்ணு கோயில்களில் பிரம்மோத்ஸவத்தின்போது நடைபெறும் ஒரு மாபெரும் உத்ஸவமாகும். திருமலையில், பிரம்மோத்ஸவ விழா நாட்களில், கருட சேவை மிக விமரிசையாக நடைபெறும். புராணத்தின்படி, மஹாவிஷ்ணு பூமியில் வசிக்க விரும்பியபோது, அவரது கட்டளைப்படி, கருடன் வைகுண்டத்திலிருந்து இப்புனிதமான மலையைக் கொண்டு வந்து இங்கு வைத்ததாக ஐதீகம்.

பிரம்மோத்ஸவத்தின்போது கருடசேவையன்று திருமலையப்ப ஸ்வாமி தங்க கருட வாகனத்தில் மாடவீதிகளில் எழுந்தருள்வார். கருட வாகனத்தில் எழுந்தருளும் திருமலையப்ப ஸ்வாமியின் தெய்வீக அழகை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. கோயிலில் நடக்கும் சம்பவங்களை நேரிடையாகக் காண்பவர்களால் மட்டுமே விரிவாக விவரிக்க முடியும். வருடாந்திர பிரம்மோத்ஸவ விழா நாட்களில், தி.தி. தேவஸ்தான எஸ்.வி. பக்திச் சேனலில், கருட சேவையை நேரடியாகக் காணலாம். மூலமூர்த்தியான திருவேங்கடமுடையானுக்கு அலங்கரிக்கப்படும் விலையுயர்ந்த ஆபரணங்களை இக்கருட சேவையின் போது திருமலையப்ப ஸ்வாமிக்கு அலங்கரிப்பர். அதுபோது திருமலையப்ப ஸ்வாமியும் சூரியனைப் போல ஜொலிப்பார். அன்றைய தினம் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சூடிக்கொடுத்த நாச்சியார் அனுப்பி வைக்கும் மாலையையும் திருமலையப்ப ஸ்வாமி சூடிக்கொள்வார்.

# திருமலையில் கருட சேவை



வாகனசேவையின்போது ஸ்வாமியின் அழகிய திருப்பாதங்களைக் கருட பகவான் தனது இரு திருக்கரங்களால் அன்புடன் பிடித்துக் கொள்வார். திருமலையப்ப ஸ்வாமியின் அழகிய உற்சவ விக்ரஹம், கருடனின் தோளில் வைக்கப்பட்டவுடன் தனது எஜமானரான ஏழுமலைவாசனுக்கு மகிழ்ச்சியுடன் சேவை சாதிப்பார். இச்சேவை இந்தியா முழுவதும் அமைந்துள்ள பெரும்பாலான விஷ்ணு கோயில்களில் பிரம்மோத்ஸவ நாட்களில் நடத்தப்படுகிறது. மஹாவிஷ்ணுவின் தெய்வீக வாகனமாக கருட பகவான் திகழ்ந்துசேவை செய்கிறார். திருமலையப்ப ஸ்வாமியும் கருடன் மீதேறி மாடவீதிகளில் தன் தரிசனத்திற்காக காத்திருக்கும் பக்தர்களுக்கு அருள் புரிவார்.

விஷ்ணு கோயில்களில் நடைபெறும் கருட சேவையில் நேரடியாகப் பங்கேற்பதன் மூலம் நம் வாழ்வில் பல நன்மைகள் நிகழும். இத்திருவிழா பல ஆயிரம் ஆண்டுகளாக விஷ்ணு கோயில்களில் நடத்தப்பட்டு வருகிறது. இது குறித்தே ஆழ்வாரும் “பறவையேறு பரம்புருடா” எனப் பாசுரமிடுகிறார்.

**– திரு. ரா. ஹரிசங்கர், கும்பகோணம்,**
**9940172897.**





# திருவேங்கடத்தானை நாடி நறையூரில் கண்டேனே

– பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி

வைணவத்தில் 108 திவ்ய தேசங்கள் என்கின்ற வழக்கு பிரசித்தி பெற்றது. எத்தனையோ திருமால் திருத்தலங்கள் இருந்தாலும் திவ்ய தேசங்கள் என்று சொல்லப்படுவது 108 தான். அதற்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை. ஆழ்வார்கள் தங்கள் அமுதத் தமிழால் எந்தெந்த திருத்தலத்தைப் பாடினார்களோ, அந்தத் தலங்கள் திவ்ய தேசங்கள் என்ற கணக்கில் வந்து விடுகின்றன.

சைவத்திலே பதிகம் பெற்ற தலங்கள், பாடல் பெற்ற தலங்கள் என்பார்கள். வைணவத்தில் பாசுரங்கள் பெற்ற தலங்கள் என்று நாம் சொல்லத்தகும் ஒரு பதிகமோ, ஓர் வரியோ அல்லது ஒரு சொல்லோ இருந்தாலும் கூட போதும், அந்தத் திருத்தலம் திவ்ய தேசம்தான்.

இறைவன் 5 நிலைகளில் இருக்கின்றான். பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை நிலைகள், இதில் அர்ச்சை நிலை ஏன் என்று சொன்னால் ஒருவனுடைய உள்ளத்தை அடைவதுதான்.

அர்ச்சை நிலையை *''பின்னானார் வணங்கும் சோதி''* என்கிறார் திருமங்கை ஆழ்வார். அர்ச்சை நிலையை இளம் கோயில் என்றும், உள்ளத்தை பெருங்கோயில் என்றும் சொல்கின்ற வழக்கம் உண்டு. ஒரு சேதன லாபம் பெற வேண்டும் என்பதற்காகவே எம்பெருமான் அரும்பாடுபடுகிறான் என்று ரகசிய நூல்கள் கூறுகின்றன.

அதனால் தான் திருமங்கை ஆழ்வார் திருவேங்கடவனைப் பாடுகின்ற பொழுது,

*வந்தாய் என் மனம் புகுந்தாய் மன்னி நின்றாய்*
*நந்தாத கொழுஞ்சுடரே எங்கள் நம்பீ!*
*சிந்தாமணியே திருவேங்கடம் மேய எந்தாய்!*
*இனி யான் உனை என்றும் விடேனே.*

என்று பாடுகிறார். “என் உள்ளத்தில் நிலை பெற்று நிற்பதற்காகவே, பர வியூகத்திலிருந்து திருவேங்கடத்திற்கு வந்தாய். நீ திருவேங்கடத்தில் வந்து நான் வரும் வரை நின்று இருப்பதன் காரணமே என்னுடைய உள்ளத்தில் நிலை பெற்று இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்”.

பரத்திலிருந்து வியூகத்திற்கு வந்து, வியூகத்தில் இருந்து இங்கே (திருமலைக்கு) வந்து விட்டான் என்பது ஒரு கோணம்.

ஆனால், அவன் வந்து நிற்பது திருவரங்கத்தில் தான். திருவரங்கம் தான் 108 திருத்தலங்களில் தலைமைத் தலம்.

அதுதான் பூலோக வைகுந்தம். அங்கேதான் வியூக நிலையிலே காட்சி தருகின்றான். வைணவர்களுக்கு கோயில் என்று சொன்னால் அது திருவரங்கம்தான்.

எல்லா அர்ச்சை நிலைகளும் திருவரங்கத்திலே லயமாகின்றன என்றும் சொல்வார்கள். ஆனால் உண்மையில் திருவரங்கம் வேறல்ல. பரமபதம் வைகுண்டம் வேறல்ல. பூலோக வைகுண்டம் தான் திருவரங்கம்.

எனவே, வைகுந்தம், பாற்கடல், திருவரங்கம், மூன்றில் எதைச் சொன்னாலும் அது மூன்றையும் குறிக்கும்.

அந்தத் திருவரங்கத்தில் வந்து புகுவதற்கு முன், விண்ணுக்கும் மண்ணுக்கும் வைப்பாக வந்து நின்ற இடம் திருவேங்கடம்.

அதனால்தான் திருவரங்கத்து அமுதனார் திருமாலுக்குரிய முக்கியமான இடங்களை வரிசைப் படுத்திச் சொல்லுகின்ற பொழுது,

*இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்*
*மாலிருஞ்சோலையென்னும்*
*பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர்*
*அவைதம்மொடும் வந்து*
*இருப்பிடம் மாயன் இராமாநுசன் மனத்து இன்று*
*அவன் வந்து*
*இருப்பிடம் என் தனிதயத்துள்ளே*
*தனக்கின்புறவே.*

இதிலே திருவரங்கத் திருத்தலமானது வைகுந்தம் என்கிற திருத்தலத்தோடு இணைந்து விடுவதால் அதை தனியாக இந்தப் பாசுரத்தில் சொல்லவில்லை.

இந்த அடிப்படையில் பார்க்கின்ற பொழுது மேலே இருந்து அவன் இந்த மண்ணிலே முதலிலே வந்து நின்ற இடம் திருவேங்கடம். இதனை ஆழ்வார்கள் பல பாசுரங்களில் கோடிட்டுக் காட்டுகின்றார்கள். உதாரணமாக திருப்பாணாழ்வார் திருவரங்கத்தைப் பாடுகின்ற பொழுது,

*மந்தி பாய் வடவேங்கட மாமலை வானவர்கள்*
*சந்தி செய்ய நின்றான் அரங்கத்து*
*அரவணையான்*
*அந்திபோல் நிறத்தாடையும் அதன் மேல்*
*அயனைப்படைத்ததோர் எழில்*
*உந்திமேலதன்றோ அடியேன் உள்ளத்து*
*இன்னுயிரே!*

என்று பாடுகிறார்! திருவேங்கடத்தை வெளிப்படையாகச் சில பாசுரங்களோடு இணைத்துப் பாடுகின்றனர். சில பாசுரங்களில் சூட்சுமமாக வைத்துப்பாடுகின்றனர். அப்படித் திருமங்கை



## மண்வட்டிலில் உணவருந்தும் திருவேங்கடவன்

மண்வட்டில் என்றால் மண்குடம். அதுவும் பாதியாக உடைந்த மண்குடம். இதனை “ஓடு” என்பர். பக்தப் பிரியனான வேங்கடநாதன் உடைந்த மட்பாண்டத்தில் பிரசாதத்தை உட்கொண்டு பக்தர்களுக்கு விருந்தாக வழங்கி வருகின்றார். குலசேகராழ்வாரோ ஊனேறு பதிகத்தில் *“மின்வட்டச்சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும் பொன்வட்டில் பிடித்து உடனே புகப்பெறுவனாவேனே”* என்கிறார். உண்பது மண்வட்டில்; உமிழ்வது பொன்வட்டில் என்பது புலனாகின்றது.

பக்தர்களே தனக்கு பரமார்த்தம்! பக்தர்களின் ஆனந்தமே தனக்கு பரமானந்தம் என்று தம்மை மறந்து ஆனந்தத்துடன் பிரகாசித்துக் கொண்டு இருக்கும் ஸ்வாமியைத் தரிசிக்க, *‘‘வேடுகொந்தாமா வேங்கடகிரி வேங்கடேஸ்வருணி....’’*என்று கீர்த்தனைகளைப் பாடிக் கொண்டு பக்தர்கள் திருமலை யாத்திரையை மேற்கொள்கின்றனர். வேங்கடவன் பக்தர்கள் சமர்ப்பித்த நிவேதனத்தை பிரியத்துடன் உட்கொண்டு அருள் புரிவார்.


வேங்கடநாதன் மிகப் பிரியமாக உட்கொள்ளும் பிரசாதங்கள் அனைத்தையும் பழங்காலத்தில் விறகு அடுப்புகளில், மட்பாண்டங்களில் மட்டுமே தயாரித்தனர். காலப்போக்கில் மட்பாண்டங்களுக்கு பதிலாக பித்தளை கங்காளங்களை உபயோகித்தனர். தற்போது பக்தர்களின் எண்ணிக்கை பெருகியதால் சமையல் எரிவாயுவை உபயோகித்து தயாரித்து ஸ்வாமிக்கு சமர்ப்பிக்கின்றனர்.

## அன்னப்பிரசாதங்களும் - மாவுப்பொருள் பிரசாதங்களும்

ஆனந்த நிலையனான ஸ்வாமிக்கு படைக்கப்படும் மாத்ரா, புளிசாதம், சர்க்கரைப் பொங்கல், கதம்பம், தத்யோதனம், பாயசம், சீரா,.......... ஆகிய அன்னப்பிரசாதங்கள் அனைத்தும் விமான பிரதக்ஷணத்தில் அமைந்துள்ள மடப்பள்ளி அறையிலும், லட்டுகள், வடைகள், அப்பங்கள், தோசைகள், ஜிலேபிகள், தேன்துலா, போளிகள் போன்ற மாவுப்பொருளாலான பிரசாதங்களை வெள்ளி வாயிலிற்கு வெளியே உள்ள மடப் பள்ளியிலும் தயார் செய்கின்றனர்.

திருவேங்கடவனுக்கு நிவேதனம் சமர்ப்பிக்கும் முன் சாம்பிரதாயப்படி, முதல் நிவேதனத்தை ஸ்வாமி ஆலயத்தில் இருந்து குடை, சாமரம், மேள தாளங்களுடன் ஸ்ரீவராக ஸ்வாமிக்கு சமர்ப்பிக்கப்படும். பின்னர் ஆனந்த நிலையானுக்கு நிவேதனமாக சமர்ப்பிப்பர். அதன்பின் ஆலயத்தில் உள்ள அஷ்டதிக்கில் உள்ள பலி பீடங்களுக்கு சமர்ப்பிப்பர்.

இவ்வாறு மூன்று வேளை களிலும் நடைபெறும். அதன்பின் ஸ்வாமி ஆலயத்திற்கு எதிரே அதாவது சன்னிதி வீதியில் உள்ள ஸ்ரீபேடி ஆஞ்சநேய ஸ்வாமிக்கும் நிவேதனம் அனுப்பப்படும்.



ஆழ்வார் திருவேங்வகடவனைப் பாடிய பாசுரம் தான் இந்தப் பாசுரம்.

*மான் கொண்ட தோல் மார்வில் மாணியாய்*
*மாவலி மண்*
*தான் கொண்டு தாளால் அளந்த பெருமானைத்*
*தேன் கொண்ட சாரல் திருவேங்கடத்தானை*
*நான் சென்று நாடி நறையூரில் கண்டேனே*

இதில் திருநறையூர் என்கின்ற திவ்ய திருத்தலத்தைப் பாடுகின்றார். திருநறையூர் என்பது சோழ நாட்டுத் திருத்தலம். திருமங்கையாழ்வாருக்கு ஆசாரியனாக இருந்து பஞ்ச சம்ஸ்காரம் செய்தவர் நறையூர் நம்பி. அதனால் நறையூர் நம்பிக்கு பாசுரங்கள் அதிகம். ஆயினும் இந்தத் தலத்துக்கு வந்தவுடன் அவர் மனதிலே திருமலையப்பன் வந்து முன்னே நிற்கிறான்.

வந்து மனம் புகுந்து மன்னி நின்றவன் அல்லவா... எப்படித் தெரியாமல் போவான்? எனவே தொடங்கும் பொழுது, *“விண்ணும் மலையும் வேதமும் வேள்வியுமாயினான் நண்ணு நறையூர் நாம் தொழுதும் எழு நெஞ்சமே”* என்கிறார்.

நாம் காயிகமாக அதாவது நம்முடைய உடம்பு விழுந்து வணங்கினாலும் மனம் விலகி நின்றால் எந்தப் பயனும் இல்லை.

உடம்பு விழுந்து வணங்குவது இருக்கட்டும். முதலில் மனம் விழுந்து வணங்க வேண்டும். காரணம் அதுதான் ஒத்துழைக்காது.

*“உள்ளமோ ஒன்றில் நில்லாது ஓசையில் எரி நின்று உண்ணும்”* என்று மனதின் ஒத்துழை யாமையை திருமங்கையாழ்வார் பாடி இருக்கிறார்.

இப்பாடலில் மூன்று செய்திகள்

1) மான் தோலால் மறைத்துக் கொண்டு யாக சாலைக்கு வந்து, மாவலி தனதாகச் சொன்ன

மண்ணை தன்னுடைய தாளால் அளந்த பெருமான் இவன்.

2) சில்லென்று சாரல் வீசும் குளிர் திருவேங்கடத்தில் உறைபவன்.

3) அந்தப் பெருமானை நாடி நறையூர் சென்றேன். அங்கே பாருங்கள் திருவேங்கடத்தான் வந்து நிற்கிறான்.

திருமலை அப்பனுக்கு ஸ்ரீநிவாசப் பெருமாள் என்று திருநாமம். திருநறையூர் நம்பிக்கும் சீனிவாசப் பெருமாள் என்று தான் திருநாமம். அங்கே ஆனந்த விமானம். இங்கே ஸ்ரீநிவாச விமானம். நறையூரில் இன்னும் ஒரு அதிசயம் உண்டு.

இந்தக் கோயிலில் ஐந்து நிலைகளிலே இவன் காட்சி தருகின்றான். ஐந்து பெருமாள், வியூக வாசுதேவன் வந்து இறங்கியதால் விபவம், வியூகம் இரண்டும் இங்கே உண்டு.

அவனே திருமங்கையாழ்வார் மனதிலே புகுந்தவன் என்பதினால் அந்தர்யாமித்துவம் இங்கே உண்டு. நமக்கு இன்றைக்கும் காட்சி தருவதால் அர்ச்சாவதார நிலை உண்டு. இப்படி ஐந்து நிலையும் ஒன்றாக உள்ள இடம் திருவேங்கடம் மற்றும் திருநறையூர்.

நம்பி என்றால் குணபூர்த்தி உடையவன். பூரணன் என்று பொருள். இங்குள்ள தாயாருக்கு என்ன திருநாமம் தெரியுமா? நம்பிக்கை நாச்சியார். நம்முடைய நம்பிக்கைக்கு அவர்தான் நாச்சியார். திருவேங்கடத்தில் அலமேலு மங்கை தாயாருக்காக வந்து நின்றான் எம்பெருமான். இங்கேயும் அதே கதை தான். மேதாவி முனிவரின் புதல்வியான வஞ்சுள வல்லி எனும் நாச்சியாருக்காக இந்தத் திருத்தலத்தில் வந்து நின்றான். அதனால் இதனை நாச்சியார் கோயில் என்றே சொல்வார்கள். இரண்டு தலங்களிலும் நாச்சியார் தான் பிரதானம்.

அது அலமேலு மங்காபுரம்.

இது நாச்சியார் கோயில்.

அங்கே மலை மேல் நின்ற கோலத்தில் காட்சி தருகிறான். அங்கே தினசரி திருக்கல்யாண உத்ஸவம் விசேஷமாக நடைபெறும்.

இங்கேயும் திருமணக் கோலத்தில் தான் நமக்கு எம்பெருமான் காட்சி தருகிறான்.





# சுப்ரபாதம் நிவேதனம் - கொலுவு

**நாள்தோறும் அதிகாலை சுப்ரபாத வேளையில் ஸ்ரீநிவாச மூர்த்திக்கு வெண்ணெய், பால், சர்க்கரை ஆகியவற்றை நிவேதனம் செய்வர். துவாபர யுகத்தில் காலை எழுந்தவுடன் யசோதா தேவி கிருஷ்ணனுக்கு வெண்ணெய் ஊட்டினாராம். அதனால் தான் ஸ்வாமிக்கு வெண்ணெய், பால், சர்க்கரை ஆகியவற்றை நிவேதனம் செய்கின்றனர் என்று சொல்லப்படுகிறது. பின்னர் ஸ்ரீநிவாச ஸ்வாமிக்கு கொலுவு (தர்பார்) நடைபெறும். தங்க சிம்மாசனத்தின் மேல் குடை, சாமரம் மரியாதைகளுடன் எழுந்தருளச் செய்து திதி,வார, நட்சத்திரம் பஞ்சாங்க ஸ்ரவணம் மற்றும் ஆலய வரவு செலவுகளை ஸ்வாமிக்கு ஒப்புவித்த பின் வெல்லத்துடன் கூடிய எள்மாவை சமர்ப்பிப்பர்.**

**சனி தேவனுக்கு பிடித்தமான எள் மாவை நாள்தோறும் திருவேங்கடவனுக்கு நிவேதனமாகப் படைக்கின்றனர். ஸ்வாமிக்கு பிடித்தமான சனிக்கிழமை விரதம் இருந்து ஸ்ரீநிவாசனை சேவித்தால் சனிக்கிரக தோஷங்கள் நீங்கும்.**



# காலை - முதல் மணி நிவேதனம்

சஹஸ்ரநாம அர்ச்சனை நிகழ்ந்த பின் முதல் மணி என்று அழைக்கப்படும் காலை நிவேதனத்தில் ஸ்வாமிக்கு புளிசாதம், பொங்கல், தத்யோதனம், சர்க்கரைப்பொங்கல் ஆகிய அன்னப் பிரசாதங்கள் லட்டு, வடை, அப்பம் முதலிய பலகாரங்கள் குலசேகர ஆழ்வார் படியின் அருகே வைப்பர். இந்த பிரசாதங்களை தயாரிக்கும் பிரதான சமையல்காரர் “ஓடு” என்ற மட்பாண்டத்தில் “மாத்ரா” என்று சொல்லப்படும் தத்யோதனத்தை மட்டுமே ஆனந்த நிலையானுக்கு எடுத்துச் சென்று சமர்ப்பிப்பார்.

தயிர் சாதத்தை மட்டுமே மண் ஓட்டில் சமர்ப்பித்து மீதியுள்ள பிரசாதங்களை குலசேகர ஆழ்வார் படி அருகே நிவேதனம் செய்வர். இம்மட்பாண்டத்தை ஒரே ஒரு முறை மட்டுமே உபயோகிப்பர். அதனால் தான் மண் வட்டில் என்று அழைத்தனர். தயிர் சாதத்தை மிக்க விருப்புடன் உட்கொள்ளும் த்வாபர யுக வழக்கம் இந்த கலியுகத்திலும் உள்ளது என்பதை உணர்த்த வேங்கடநாதனுக்கும் தயிர் சாதத்தை நிவேதனமாகப் படைக்கின்றனர்.

திருவேங்கடவனுக்கு பிரம்மோத்ஸவத்தில் கருட வாகன சேவை மிகவும் விசேஷம். லக்ஷக் கணக்கான மக்கள் அன்றைக்கு கூடுவார்கள்.

திருமலையில் ஒரு மலை கருடாத்ரி என்ற பெயருடன் விளங்குகின்றது. வேத வடிவினன் அல்லவா.அதே கருடனுக்கு இந்த நறையூரிலும் விசேஷம். கல் கருட சேவை என்பது மிகப் பிரபல்யம். லக்ஷக்கணக்கான மக்கள் கூடுவார்கள்.

*மான் கொண்ட தோல் மார்வில் மாணியாய் மாவலி மண்*
*தான் கொண்டு தாளால் அளந்த பெருமானைத்*
*தேன் கொண்ட சாரல் திருவேங்கடத்தானை*
*நான் சென்று நாடி நறையூரில் கண்டேனே*

இப்பொழுது மறுபடியும் பாசுரத்தைச் சிந்தித்துப் பாருங்கள். பலப் பல அர்த்தங்கள் புரியும். பகவானின் லீலைகளும் தெரியும்.

## ஏகாந்த சேவையில் மேவா நிவேதனம்




திருவேங்கடவனுக்கு தினமும் நடைபெறும் சேவைகளில் இறுதியானது ஏகாந்த சேவையாகும். இச்சேவை யின்போது ஸ்ரீபோக ஸ்ரீநிவாச மூர்த்தியை சயன மண்டபத்தில் எழுந்தருளச் செய்வர். இச்சேவையுடன் ஸ்வாமி தரிசனமும் நிறைவடையும். இச்சேவையில் ஸ்வாமிக்கு நன்றாக காய்ச்சி ஆற வைத்து, மிதமான சூட்டுடன் சர்க்கரை கலந்த பால், பழங்கள் மற்றும் பஞ்ச கஜ்ஜாயத்துடன் மேவா என்ற பஞ்சாமிர்தம் போன்ற பிரசாதத்தை நிவேதனம் செய்வர்.





# தயையே வடிவெடுத்த திருவேங்கடவனும் ஸ்வாமி தேசிகனும்

- திருமதி பிரேமா வரதன்,
புதுதில்லி,
9899713565



உத்தமமான புரட்டாசித் திருவோணத்தில் அவதரித்த ஸ்ரீநிவாசனின் கண்டாவதாரமாக (அதே திருவோணத்தில்) நம் தூப்புல் குலமணி ஸ்வாமி தேசிகன் ஸ்ரீநிவாசனின் அபார கருணையே வடிவெடுத்த தயா தேவியை ஸ்தோத்ரம் பண்ணுகிறார். இந்நூல் “தயா சதகம்” என்ற 108 சுலோகங்களைக் கொண்டது. இவ்வற்புதமான தயா சதகத்தைச் சற்றே அநுபவிப்போம் வாரீர்!

## தயா சதகம்

*“ப்ரபத்யே... சர்க்கராயிதம்”* - சுலோ-1

இங்கு இம்மஹாகவி திருவேங்கடமுடையானைத் துதிக்கக் கருதி “அச்சுத சதகம்” முதலானவை போல் “ஸ்ரீநிவாச சதகம்” என்று பெயரிடாமல், பகவானுடைய இதர மூர்த்திகளில் சௌர்ய வீர்யாதிகளோடு கலந்து நிற்கும் தயா குணத்தை, ஸ்ரீநிவாசனிடத்தில் இதர குணங்களைக் காட்டில் விஞ்சியிருப்பதை அனுஸந்தித்து சூரியனுக்கு ஒளியால் பெருமை வருவது போல், தயா குணத்தாலேயே ஸ்ரீநிவாசனுக்குப் பெருமையென்றும் அநுசந்தித்து ஆதலால் ஸ்ரீநிவாசனைக் காட்டிலும் அவருடைய தயா குணமே நமக்குத் தஞ்சமென்று நிரூபிக்க இந்தக் க்ரந்தத்திற்கு “தயா சதகம்” என்று பெயரிட்டார். “ஸ்ரீ” நிவாசன் என்ற பதத்துக்கு ஸ்ரீதேவிக்கு இருப்பிடமானவன் என்றும், ஸ்ரீதேவியினிடத்தில் இருப்பவன் என்றும் இரண்டு விதமாய் பொருள் உண்டு. முதல் பொருளில், திருமார்பில் லக்ஷ்மி தேவியைத் தரிப்பவனாதலால் வந்த பெருமை சொல்லப்பட்டது.

இரண்டாவது பொருளில் பிராட்டியை தயா வடிவமாக அநுசந்தித்து அந்த தயையே இத்திருமலையாக அவதரித்தானதாகையால் திருமலையில் வசிப்பவனே ஸ்ரீதேவியிடம் வசிப்பவனாகச் சொல்வது பொருந்தும். இம்மலைக்கு அநாதி காலம் தொட்டு “திருப்பதி” என்று பெயர் வழங்குவதிலிருந்து இக்கருத்து வெளிப்படும்.






## மதியம் நிவேதனம்

மதியம் அஷ்டோத்ர சத நாமார்ச்சனை முடிந்த பின் ஸ்வாமிக்கு இரண்டாவது மணி அதாவது மதியம் நிவேதனம் செய்யப்படும். அன்னப்பிரசாதங்களுடன் சுத்தான்னம், பக்தர்கள் வேண்டுதலாக படைக்கப்படும் அன்னப்பிரசாதம், சீரா, பாயசம், கேசரிபாத், க்ஷீரான்னம், கதம்பம் முதலிய பிரசாதங்கள் ஸ்வாமிக்கு படைக்கப்படும்.

இரண்டாவது மணி ஆனவுடன் ஸ்ரீதேவி பூதேவி சமேதமாக திருமலையப்ப ஸ்வாமிக்கு கண்ணுக்கு விருந்தாய் நிகழ்த்தப் பெறும் நித்ய கல்யாண உத்சவம் முடிந்த பிறகு, லட்டு, வடை, அப்பம், தோசை ஆகியவற்றுடன் சர்க்கரைப்பொங்கல், புளியோதரை, பொங்கல், தத்யோதனம் ஆகிய அன்னப் பிரசாதங்களை நிவேதனம் செய்வர்.

ஆலயத்திற்கு வெளியே உள்ள வைபவோத்சவ மண்டபத்தில் நிகழும் ஆர்ஜித பிரம்மோத்சவத்திலும், அதன் பின் கண்ணாடி மண்டபத்தில் நடைபெறும் டோலோத்சவத்திலும், மாலை நிகழும் சஹஸ்ர தீபாலங்கார சேவையிலும் ஸ்வாமிக்கு பஞ்சகஜ்ஜாயம் என்கிற பிரசாதம் நிவேதனமாக சமர்ப்பிக்கப்படும்.

சர்க்கரை, கசகசா, கல்கண்டு, திராட்சை, முந்திரி, பாதாம் பருப்பு, ஏலக்காய், உலர்ந்த தேங்காய் அனைத்தையும் கலந்து பொடி செய்த பிரசாதமே இந்த பஞ்ச கஜ்ஜாயம். இதனையும் மடப்பள்ளியிலேயே தயாரிப்பர். பின்னர் திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெறும் வசந்தோத்சவத்தில் ஸ்வாமிக்கு தோசை, அன்னப் பிரசாதங்கள் முதலானவற்றை சமர்ப்பிப்பர்.

(திரு–பிராட்டி, பதி–இடம்) அப்பிராட்டியே இம்மலை வடிவமாகக் காணப்படுகிறாள் என்று “மலையே திருவுடம்பாய்” என்பது முன்னோர்களின் பாசுரம். “அநுக்கரஹ மயீம் வந்தே” என்று மற்றொருவிடத்தில் இக்கருத்தின் அநுஸந்தானம் ஆகையால் பிராட்டியின் ஸ்வரூபகுணமான தயை ஒரு ஆறாகப் பெருகி, தோய்ந்தவிடமே இம்மலை என்கிறார்.

மேலும், தயா தேவி வெள்ளமெடுத்துப் பெருகினது வெறும் ஜலமல்ல. கரும்பின் சாறு நதியாகப் பெருகி உறைந்தது. இங்கு “சர்க்கரா” என்ற சொல்லுக்கு பருக்கைக் கல் என்றும், சர்க்கரை என்றும் இரண்டு பொருள் உண்டாகையால் இங்கு மலையில் காணப்படும் பருக்கைக் கற்களைச் சர்க்கரை என்று சொல்லி ச்லேஷம் என்னும் சொல்லலங்காரத்தை முன்னிட்டு சமத்காரமாக வர்ணிக்கிறார் கவி. இங்கு தயை கரும்பின் சாறு நதியாகவும், பருக்கங்கற்களை இனிய சர்க்கரையாகவும் இரண்டு விதமான வர்ணனை “இவ” என்றும், “ப்ராய” என்றும் இவ்விரண்டு பதங்களும், இவ்விரண்டு அர்தாலங்காரங்களை ருசிப்பிக்கின்றன.

இவ்விரண்டில் ஒன்றை உவமையாக்கி, மற்றொன்றை உத்ப்ரோக்ஷாலங்காரமாகக் கொண்டாலும் விரோதமில்லை. இந்தச் சுலோகத்தை மங்கல சுலோகமென்று கூறுவது உண்டு. மங்கலமாவது இஷ்டமான தேவதையை வணங்குவது. கார்யம் செய்யத் தொடங்குவதற்கு முன் அக்கார்யம் இடையூறின்றி முடிவு பெறுவதற்காக இஷ்ட தேவதையாக வணங்குவது முன்னோர்களின் வழக்கம்.

மேலும் மங்கலச்லோகத்தில் நான்கு பொருட்கள் அடங்கியிருக்க வேணும் எனும் ஸம்ப்ரதாயம் உண்டு. அவையாவன

1) இந்நூலில் சொல்லப்படுகிற முக்கியப் பொருள் எது?

2) இந்நூலைக் கற்பதனால் உண்டாகும் பயன் யாது?

3) இந்நூலைக் கற்க உரிமையுள்ளவன் எவன்?

4) முக்கியப் பொருளுக்கும் இந்நூலுக்கும் சம்பந்தம் யாது? என்பவை.

1) ஸ்ரீநிவாசனுடைய தயையே மேம்பட்ட தெய்வம். (தயாதேவி); 2) இம்மையிலும் மறுமையிலும் துல்யமான இன்பபோகம்; 3) இகத்திலும் பரத்திலும் சேரவின்பங்களை அனுபவிக்க விரும்புவோன்; 4) வாச்ய வாசக பாவம் – அதாவது சொல்லும் பொருளும் என்ற ஸம்பந்தம்

இந்த சுலோகத்தினால் இஷ்டதேவதா நமஸ்காரம் என்ற மங்கல கார்யமும், "அநுபந்த சதுஷ்டயம்" என்று முன் சொன்ன நான்கு பொருட்களை உணர்த்துவது மட்டுமின்றி, மற்றொரு விஷயத்தையும் அநுஷ்டான முறையில் கூறுகிறார் கவி. அதாவது – திருவேங்கடமுடையானைத் தொழச் செல்பவர் மலையடிவாரத்தில் நின்று திருமலையைத் தண்டனிட்டு கை கூப்பி பின்பு மலையேற வேணும் என்பதைத் தான் செய்து காட்டினார் என்பதாகும்.

## ஸாத்விகத்யாகம்

*"வேதாந்த தேசிகபதே... வேங்கடசைலநாத:"*

–சுலோ–104

எல்லா கிரியைகளிலும் த்யாக முறை என்பது ஒன்றுண்டு. அதாவது கார்யங்களைச் செய்யத் தொடங்கும் போதும், முடித்த பின்னும் இந்தக் கார்யம் எம்பெருமானைச் சேர்ந்தது. இதைச் செய்கிறவனும் எம்பெருமானே, இத்தால் உண்டாகும் பயனும் எம்பெருமானுக்கே என்று நினைத்தல். இவ் விஷயம் பகவத் கீதையில் நன்கு விளக்கப் பட்டுள்ளது. இதையொட்டி ஸ்வாமி தேசிகனும் இந்த தயாசதக நூல் எழுதிய மஹா கைங்கர்யத்தை, பகவானிடத்தில் அர்ப்பணம் செய்கிறார். இங்கு தன்னை வேதாந்த தேசிக ஸ்தாநத்தில் வைத்து, திருவேங்கடமுடையான் தன்னுடைய ஸ்தோத்ரத்தைத் தானே எழுதிக் கொண்டான் என்று அருளிச் செய்த ஸ்வாரஸ்யத்தைக் கவனிக்கவும்.

இந்த தயாசதகத்தை வீணா கானத்தோடு ஒப்பிடுகிறார் ஸ்வாமி தேசிகன். ஏழு தந்திகளால் வாசிக்கப்படுகிற "விபஞ்சீ" என்கிற யாழிசை, ஆழ்வார்கள் அருளிய திவ்யப்ரபந்தங்களுக்கு ஒப்பாகும். திவ்யப்ரபந்தம் – யாழினிசை வேதத்தியல் ஸ்ரீமந்நாத முனிகள், "தாளம் வழங்கித் தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல்" என்று போற்றப்படுகிறார். ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீமந்நாத முனிகளுக்கு ஒப்பான வரன்றோ! ஆகவித்தால் அவையடக்கம் கூறினது, பொருளடக்கம் விளக்கினது, சொற் சுவையைக் காட்டியது, ஸாத்விகத்யாகம் என்ற சாஸ்த்ரத்தை வெளியிட்டது என்ற இவ்வளவு பொருட்களையும் சுருக்கமாய் எடுத்துரைத்தார் கவி.

இப்படியாக தயா தேவியைப் புருஷகாரமாகப் பற்றித் திருவேங்கடமுடையானின் திருவருளைப் பெறுவோமாக!

*"வேங்கடமென்னும் வேத வெற்பே!"*

## இரவு நிவேதனம் மூன்றாம் மணி

**மாலையில் வேங்கடவனுக்கு "தோமாலை சேவை" என்ற புஷ்ப அலங்கார சேவையை நிகழ்த்துவர். இந்த சேவைக்குப் பின் பெரிய நெய் தோசைகள், மிளகன்னம், கதம்பம் முதலிய பிரசாதங்களை ஸ்ரீநிவாசருக்கு சமர்ப்பிப்பர். இவ்வாறு 3ஆம் மணியுடன் இரவு நிவேதனம் செய்வர். கடைசியாக "திரு வீசம்" என்ற சிறப்பு நிவேதனத்தில் சர்க்கரைப் பொங்கல் மட்டுமே சமர்ப்பிப்பர்.**



# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 87

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | 2 |
| | | 3 | | | | | | | | | |
| | | 4 | | | | | | | | | 5 |
| | | | | | | | | | 6 | 7 | |
| | | | 8 | | | | | | 9 | | |
| | | | | | | | | 10 | | | |
| | | | 11 | | | | | | | | |
| | | | 12 | | | | | | | | |
| | | | | | | 13 | 14 | | | | |
| | | 15 | | | | | | | | | |
| | | 16 | | | | | | | | | |
| | 17 | | | | | | | | | | 18 |

## இடமிருந்து வலம்

1. திருமலையப்ப ஸ்வாமி வீதியுலாவில் திவ்ய பிரபந்தப் பாசுரங்களைப் பாடி வருபவர்கள்....(8)
3. திருமலையில் உத்ஸவ மூர்த்திக்கு பூஜை நடைபெறும் மண்டபம்....(10)
8. திருமலை நம்பிகளிடம் திருப்பதி மலையடிவாரத்தில் ராமாயண காலக்ஷேப கேட்ட ஆசாரியர் ....(6)
11. திருவேங்கட நாதனுக்கு அபிஷேகம்....(4) திருமஞ்சனம்.
12. திருமலையில் குப்பைகளை அகற்றும் தூய்மை இயக்கம் .....(4) ச்ரமதானம்.
15. அனந்தாழ்வான் வம்சத்தவர் இயற்றிய கத்யம் ...(8)
16. வெள்ளிக்கிழமை தோறும் அபிஷேகத்திற்குப் பின் அலங்காரமின்றி மூலமூர்த்தியின் திருவடிகளைக் கண்டு மகிழ்தல்....(9)

## வலமிருந்து இடம்

2. மாலவனை மண் மலர்களால் பூஜித்தவர்....(4) நம்பி.
5. திருவேங்கடமுடையானின் தாடையில் வைக்கப்படுவது....(9)
6. ஸ்ரீநிவாச ஸ்வாமியுடன் சொக்கட்டான் ஆடிய பக்தர்....(7)
10. திருவேங்கடமுடையானுக்கு தீர்த்த கைங்கர்யத்திற்காக தீர்த்தம் அளிக்கின்ற ஊற்று...(6)
13. திருமலை திருக்கோயிலுக்குள் உள்ள புனிதக்கிணறு ....(3) தீர்த்தம்.
18. திருமாலால் "தாத்தா" என்று அழைக்கப்பட்டவர் .....(9)

தொகுப்பு :
திரு. டி. ஆர். மனோகர்,
தஞ்சாவூர், 99426 44807

புதிருக்கு விடை அறிய
26ம் பக்கம்
பார்க்கவும்...

## மேலிருந்து கீழ்

1. பிரம்மோத்ஸவம் முடிந்து மறுநாள் மலையப்ப ஸ்வாமி எழுந்தருளும் இடம்....(11)
4. தினமும் மாலை நடைபெறுவது....(6) அலங்கார சேவை
7. சித்திரை மாத வளர்பிறை நாட்களில் நடக்கும் விழா....(8)
9. ஏழுமலை வாசனுக்கு நடக்கும் ஊஞ்சல் சேவை....(6)
10. திருமலை கோயிலில் வருடாந்திர கணக்குத் தொடங்கும் நிகழ்ச்சி.... (4) ஆஸ்தானம்.

## கீழிருந்து மேல்

13. வைகானச ஆகமங்களை தன் சீடர்களுக்கு மலையில் போதித்த முனிவர்....(4) மஹரிஷி.
14. திருமலையில் ஓடுகின்ற இலவசப் பேருந்து.....(3) ரதம்.
17. வியாழன் அன்று ஸ்வாமி கண்டருளும் சேவை...(8)
18. திருமலை திருக்கோயிலின் துலாபார காணிக்கை செலுத்தும் இடம்....(11)



# பாலாஜி இருக்க பயமேன்!

– திரு. ச. இராமதாசு,
புதுச்சேரி,
9976889162.

திருப்பதி ஏழுமலையானின் வலது திருக்கரம் திருவடியைக் காட்டியபடி இருக்கும். இதன் பொருள் "பாலாஜி இருக்க பயமேன்" எனக் கொள்ளலாம். கிரக தோஷத்தில் இருந்து விடுபட ஏழுமலையானை சரணடைவது தான் ஒரே வழி.

### பஞ்சபேரம்

வெங்கடாஜலபதி, மலையப்பர், உக்ர ஸ்ரீநிவாசர், போக ஸ்ரீநிவாசர், கொலுவு ஸ்ரீநிவாசர் என திருப்பதி பெருமாள் பஞ்ச பேரராக காட்சியளிக்கின்றார். மூலவர் கருவறையில் நின்ற கோலத்தில் சங்கு, சக்கரம் ஏந்தியபடி காட்சியளிப்பார்.திருவிழாக்களில் ஸ்ரீதேவி, பூதேவியர்களுடன் வீதி உலா வருபவர் மலைக்கினிய பெருமாளான மலையப்பர். உக்ர ஸ்ரீநிவாசர் கார்த்திகை மாதம் துவாதசியன்று மட்டும் அதிகாலையில் உலா வருவார். வெள்ளியாலான போக ஸ்ரீநிவாசரே அபிஷேகம்ஏற்று இரவு பள்ளி யறை பூஜைக்குச் செல்பவர். கொலுவு ஸ்ரீநிவாசர் அன்றாட வரவு, செலவுக் கணக்கை ஏற்பவர்.

### வாசல் தேடி வரும் வேங்கடவன்

புரட்டாசி சனிக்கிழமைகளில் மாவிளக்கு ஏற்றினால் நினைத்தது நிறைவேறும். இதனை வீட்டிலேயும் செய்யலாம். திருப்பதி ஏழுமலையான் படத்திற்கு முன்பு தேங்காய், வாழைப்பழம், வெற்றிலைப்பாக்கு நைவேத்யம் செய்து வேங்கடேச ஸ்தோத்திரம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் படித்தால் வீடு தேடி திருப்பதி ஏழுமலையப்ப ஸ்வாமி வருவார்.

### நீண்ட ஆயுள் பெற

பிரம்மாவிடம் ஒரு முறை நாரதர், "பக்தர்கள் கடைபிடிக்க வேண்டிய சிறந்த விரதம் எது?" எனக் கேட்டார். "புரட்டாசி சனிக்கிழமை விரதமே சிறந்தது" என்றார் பிரம்மா. அன்றைய தினம் விரதமிருப்போர் துளசி தீர்த்தமருந்தி விரதம் தொடங்கி, மதியம் ஒரு வேளை உணவும், இரவு பாலும், பழமும் சாப்பிடுவர்.

புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், பானகம் போன்ற நைவேத்யங்களை

படைப்பர். இதனால் கிரக தோஷம் அகலும், ஆயுள் அதிகரிக்கும், உடல் நலம் சிறக்கும், செல்வம் சேரும்.

### காணாமல் போன சபதம்

ஸ்ரீரங்கம் ரங்கநாதரின் பக்தரான பிள்ளைப் பெருமாள் ஐய்யங்கார் , ஸ்ரீரங்கம் தவிர்த்த வேறெந்த பெருமாளையும் வழிபடுவதில்லை எனச் சபதம் செய்திருந்தார். "அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் (ஏழுமலையான்) பாட மாட்டேன்" என்றும் கூறினார். இந்நிலையில் மணவாள தாசர் கண்டமாலை என்னும் நோயால் அவதிப்பட்டார். தவறுக்கு மனம் வருந்தி திருப்பதி ஏழுமலையானின் திருவடியைச் சரணடைய நோய் மறைந்தது. அதன் பின் சபதத்தை கைவிட்ட தாசர், திருவேங்கடத்து அந்தாதி, திருவேங்கட மாலை இயற்றினார்.

### சுப்ரபாதம்

திருப்பதி ஏழுமலையானுக்கு தினமும் அதி காலையில் சுப்ரபாத சேவை நடக்கும். அப்போது பிரதிவாதி பயங்கரம் அண்ணா என்பவரால் எழுதப் பட்ட சுப்ரபாதத்தை கேட்டபடி துயில் எழுகிறார். இதில் வேங்கடேச ஸ்தோத்திரம், வேங்கடேச பிரபத்தி, மங்களாசாசனம் இடம் பெற்றிருக்கும். பசும் பால், வெண்ணெய், சர்க்கரை கலந்த நைவேத்யம் படைத்து தீபாராதனை நடக்கும். இதற்கு நவநீத ஆரத்தி என்று பெயர்.

### முத்து மாலை கொடுத்த பக்தை

ஏழுமலையானின் பக்தையான வெங்கமாம்பா, பெற்றோரின் வற்புறுத்தலால் வெங்கடாஜலபதி என்பவரை திருமணம் செய்தார். குடும்ப வாழ்வில் ஈடுபாடு இல்லாததால் துறவறம் பூண்டு ஏழுமலை மீதுள்ள தும்புரு தீர்த்தக்கரையில் வாழ்ந்து அங்கேயே சமாதியானார். இவரது சமாதி திருமலையில் வடக்கு வீதியில் உள்ளது. இவர் உத்ஸவர் போக ஸ்ரீநிவாசருக்கு முத்து மாலை ஒன்றை தானமாகக் கொடுத்துள்ளார். ஸ்ரீவேங்கடேச மாஹாத்மியம், தத்வ கீர்த்தனம், கிருஷ்ண மஞ்சரி, நரசிம்ம விலாசம், பாலகிருஷ்ணர் நாடகம் இவரால் படைக்கப்பட்டவை.




விசேஷ நாட்களில் திருவேங்கடவனுக்கு பாயசம், கேசரிபாத், சாகரிபாத், பகாளாபாத், மனோஹரம் எனும் சிறப்புப் பிரசாதங்களை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்கின்றனர். உகாதி ஆஸ்தானம், ஆனிவர ஆஸ்தானம், தீபாவளி ஆஸ்தானம் போன்ற ஆஸ்தானங்கள் மற்றும் பிரம்மோத்சவ சமயத்தில் நடைபெறும் திருவீதி உத்சவம் காணும் போதும், பார்வேட்டை உத்ஸவங்களின் போதும் சிறப்பு நிவேதனங்களைச் சமர்ப்பிக்கின்றனர்.

இவ்வாறு எத்தனையோ பிரசாதங்களை வேளை தவறாமல் நேரம் தவறாமல் ஸ்வாமிக்கு நிவேதனம் செய்கின்றனர். ஸ்ரீநிவாசருக்கு எந்த வேளை என்ன உத்சவம் நடைபெறுமோ அந்த வேளைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரசாதத்தை ருசிகரமாக தயார் செய்து ஸ்வாமிக்குப் படைக்கின்றனர்.

உலகில் எந்த ஆலயங்களிலும் இவ்வாறு பெரிய அளவில் நிவேதனங்களைச் செய்ய மாட்டார்கள். எல்லா பிரசாதங்களும் நெய்யினால் மட்டுமே தயாரிக்கின்றனர். மடப்பள்ளியில் அனைத்துப் பிரசாதங்களுக்கும் ஒரு நாள் உபயோகப்படுத்தும் நெய், வேறு ஆலயங்களில் ஒரு வருடத்திற்கு உபயோகிக்கலாம்.

# ஏகாதசி

திரு.துளசி கிருஷ்ணா,
சென்னை.



**ரமா ஏகாதசி**

கார்த்திகை மாதம் கிருஷ்ணபக்ஷ ஏகாதசி ரமா எனப்படும். மிக்க மகிமை வாய்ந்தது. முசுகுந்தன் என்பவன் ஒரு பேரரசன். புகழாளன். அஷ்டதிக் பாலகர் களுடனும், விஷ்ணுவுடனும் இவனுக்கு நட்பு உண்டு. இவன் சதாசார சம்பன்னன் சத்யசந்தன். இவன் தானும் ஏகாதசி உப வாசம் இருந்து ஒருவர் கூட விலக்கில்லாமல் தன் கடுமையான கட்டளையினால் ஏகாதசி உபவாசத்தை எல்லாரும் அநுட்டிக்கும்படி செய்யலானான். முசுகுந்தனின் செல்லப் பெண் சந்திரபாகா என்பவள் பேரழகி. இக்குணவதியை சந்தி சேனனுடைய மகன் சோபனனுக்கு மணமுடித்தான்.

ஒருநாள் சோபனன் மாமனார் வீட்டுக்கு வந்தான். அன்று கார்த்திகை மாத கிருஷ்ணபக்ஷ தசமி. காவலர்கள் இன்று தசமி "நாளை ஏகாதசி" ஏகாதசியில் ஒருவரும் உண்ணலாகாது என்று பறை அறிவித்துக் கொண்டிருந்தனர். இதைக் கேட்ட சோபனன் தன் மனைவி சந்திர பாகாவிடம் இது என்ன என்று கேட்டான். சந்திரபாகை, "நாதா, என் தகப்பனார் வீட்டில் ஏகாதசியில் யானை, குதிரை, பசு மற்றும் இருக்கும் விலங்குகளுக்கும் புல் வைக்கோல் தண்ணீர் முதலிய ஒன்றும் கொடுப்பதில்லை. அப்படியிருக்க மனிதர்களுக்குக் கேட்க வேண்டுமா? ஆகையால் இங்கு இருப்பவர்களும், வந்தவர் யாராக இருப்பினும் அவர்களும் ஏகாதசியில் சாப்பிடாமல் உபவாசம் இருக்க வேண்டும். இவ்வாறு நடந்து கொண்டிருக்கிற வழக்கத்தை தசமி தினத்தில் பறைசாற்றித் தெரிவிப்பது வழக்கம். அதையே தான் தாங்கள் இப்பொழுது கேட்டது, தங்களுடைய உடல் நிலையில் உபவாசமிருக்க இயலாது. ஆகையினால் தாங்கள் ஊருக்குச் சென்று, இரண்டு நாள் கழித்து வாருங்கள் என்று கணவனிடம் கூறினாள்.

சோபனன் "நாளை தினம் புண்ய ஏகாதசி விரதத்தில் உபவாசம் நானும் இருக்கிறேன் இது நல்லதுதானே என்று கூறினான். பகவத் சங்கல்பத்தின்படியேதான் எல்லாம் நடக்கும் என்று கூறி விரதம் இருந்தான். பசி தாங்காது இரவில் மிகவும் அவதிப்பட்டு, மறுநாள் சூரியோதயத்துக்கு முன்பு இறந்து விட்டான். சந்திரபாகா மிகவும் புலம்பினாள்.



அரசர்க்குரிய மரியாதைகளுடன் சோபனனுடைய ஈமச் சடங்குகள் நடைபெற்றன. சோபனன் ரமா ஏகாதசி மகிமையால் விரைவிலேயே மந்த்ர மலை யில் இருக்கும் பேரரசில் பிறந்தான். அந்த நகரம் தேவலோகத்திற்கு நிகர்ந்தது.

அங்குச் செல்வம் கொழித்தது. தேவலோகத்தில் இருப்பது போல் தங்கம் வெள்ளி நவமணிகள் சாதாரணமாக புழக்கத்தில் இருந்தன. ரத்தினத்தால் ஆன அரசுக் கட்டில் வெண்கொற்றக்குடை, கிரீட குண்டல, ஹார கேயூரங்களாகிற ஆபரணங்கள் இவற்றால் அலங்கரிக்கப்பட்டு தேவர்களாலும் துதிக்கப்பட்ட அவன் ஆட்சி பீடத்தில் அமர்ந்து செங்கோல் நடத்தினான்.

வையாய் இந்நகரமும் நிலையற்றதாய் இருக்கிறது. இதை நிலைபெறச் செய்ய உதவுங்கள் என்றான். நீங்கள் ஊர் திரும்பி என்னுடைய மனைவியிடம் இந்த விருத்தாந்தத்தைக் கூறுங்கள் என்றான்.

இந்த நகரம் நிலை பெறும் என்று அரசன் கூறினான். சோமசர்மா நேராக தன்னூரடைந்து சந்திரபாகாவை சந்தித்து அனைத்தையும் கூறினான். உடனே அவள் அந்தணனிடம் தன்னை மந்த்ரா சலத்துக்கு அழைத்துச் செல்லுமாறு வேண்டினாள். அவ்வரசரே எனக்கு பர்த்தா என்று கூறி அந்தண னுடன் மந்த்ராசலம் சென்று சேர்ந்தாள். நடுவில் வாம தேவ ஆஸ்ரமத்தில் வாம தேவரை வணங்கினாள். சந்திர பாகாவை அவர் அநுக்ரகித்தார்.



## கல்வி வளம் அருளும் கலைவாணி

**நவராத்திரியில் முப்பெரும் தேவியர்களில் கல்விக் கடவுளான சரஸ்வதி தேவி வழிபாடு மிகவும் சிறப்பானது. இந்த பூஜையில் குழந்தைகள் படிக்கும் புத்தகங்கள், எழுத்தாணி, பலகை, சித்திரம் வரைவதற்கு தேவையான பொருட்கள் போன்றவற்றை பூஜை செய்யும் இடத்தில் வைத்து அதற்கும் பூஜை செய்தல் வேண்டும். அன்று தன்னால் இயன்ற அளவிற்கு பலகை, புத்தகங்கள் போன்றவற்றை தானம் அளிப்பது நன்று. சிறு குழந்தைகளுக்கு "அக்ஷராப்யாஸம்" என்ற நிகழ்ச்சியை நடத்தி, குழந்தைகளுக்கு முதன் முறையாக எழுதுவதற்கு பயிற்சியைக் கூடத் துவங்குவர்.**

**திருமலையில் பிரம்மோத்ஸவத்தின்போது மூன்றாம் நாள் காலையில் திருமலையப்ப ஸ்வாமி ஹம்ஸ வாகனத்தில் கல்விக் கடவுளான சரஸ்வதி தாயார் அலங்காரத்தில் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளிப்பது வழக்கமாக உள்ளது.**

ஒரு நாள் முசுகுந்தனின் நகரத்தில் வசித்து வந்த சோமசர்மன் என்ற அந்தணன் மந்த்ராசலத்தை அடைந்தான். அரசனைக் கண்டான். வாழ்த்தினான். இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் அரசனுக்கு பூர்வ ஜன்ம நினைவு வந்தது. ரமா ஏகாதசியின் பெருமையை சோம சர்மாவுக்குக் கூறினான். எனது மாமனார் முசுகுந்தனும், மனைவி சந்திரபாகாவும் நலமா என்று விசாரித்தான். அந்தணோத்தமரே! நான் முழு ஈடுபாட்டுடன் இந்த ரமா ஏகாதசியை அனுட்டித்தேனல்லேன். பிறருடைய கட்டளைக்குக் கீழ் படிந்து உபவாசம் இருந்தேன். அதன் பயனாய் எனக்குக் கிடைத்த இப்பிறப்பு இப்பெருஞ்செல்வம். இந்நாட்டின் வளம் அனைத்தும் நிலையில்லாத

புண்ணிய தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தார். தீர்த்த மகிமையாலும், மகரிஷி அநுக்கிரகத்தாலும், மந்திர மகிமையாலும், ஏகாதசி உபவாசத்தாலும் அவள் (திவ்ய சக்தியை) எங்கும் செல்லும் திறமையைப் பெற்றாள். சந்திரபாகா சிறிது நேரத்தில் மந்த்ராசலத்தை அடைந்தாள். தன் கணவனை அடைந்து, நாதா, நான் என்னுடைய தந்தையினு டைய அகத்தில் எட்டு ஆண்டு காலம் வாழ்ந்துள் ளேன். அதுவரையில் நான் அநுட்டித்த விரத பலன்களை மனமுவந்து தானம் செய்கிறேன். இத னால் இந்த நகரம் நிலைத்து நிற்கும் என்று கூறி தானம் செய்தாள். நகரம் நிலைத்தது. சோபனனும் சந்திரபாகாவும் திவ்ய போகங்களை அனுபவித்துக்

கொண்டு அந்நாட்டை ஆண்டனர். இந்த ஏகாதசி காம தேனுவைப் போலவும், சிந்தாமணியைப் போலவும், விரும்பியதைக் கொடுக்கும். நீயும் இந்த ரமா ஏகாதசியை அநுட்டித்து பயன் பெறுவாயாக என்று கண்ணன் கூறினான்.

## பிரபோதினி

தர்மபுத்திரர், கிருஷ்ணனை கார்த்திகை மாத சுக்ல பக்ஷ ஏகாதசியின் மகிமையைக் கூற வேண்டும் என்று கேட்டார். உடனே கண்ணன் யுதிட்டிரா! இதே வினாவை முன்னொரு சமயம் நாரதர் பிரம்மாவைப் பார்த்து வினவினார். பிரம்மா அவருக்கு கூறியதை நான் உனக்குக் கூறு கிறேன் கேள். கார்த்திகை சுக்ல பக்ஷ ஏகாதசி பிரபோதினி எனப்படும்.

புண்ணியங்களைக் கொடுக்கும். பாபங்களைப் போக்கும். இந்த ஏகாதசி உபவாசம் ஒன்றினாலேயே 1000 அஸ்வமேத யாக பலனும், 100 ராஜசூய யாக பலனும் கிட்டும். கிடைக்க முடியாதவை கிடைக்கும். 100 லோகங்களிலும் எவை காணற்கரியதோ அவற்றைக் காணச் செய்யும். ஐஸ்வர்யத்தை யும், ஞானத்தையும் அளிக்கும். நாம் ஜன்ம ஜன்மமாக பண்ணிய பாபப் பெருமலையை இது அநாயாசமாகப் போக்கும்.

யாக யக்ஞ தர்மங்களினால் கிடைக்கும் புண்ணியங்களை அணு அளவாகக் கொண்டால், இந்த ஏகாதசியினால் கிடைக்கும் புண்ணியம் மேரு மலைக்கு ஒப்பாகும். எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலனை இந்த ஓர் ஏகாதசி கொடுக் கும். எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து ஸ்வர்ண தானம், பூமி தானம் முதலிய பல தானங் களைச் செய்த பலன் ஓர் ஏகாதசியில் இரவில் ஜாகரணம் இருப்பதால் பெறலாம்.

இந்த ஏகாதசியில் உபவாசம் இருப்பவன் தம் குலத்தை புனிதமாக்குகின்றான். ஞானியும், யோகியும், தபஸ்வியும், ஜிதேந்திரியனும் ஆவான். அவர்க்கு யோகமும், மோக்ஷமும் கைமேல் இருப் பன. உள்ளம், உரை, செயல் ஆகிய முக்கரணங்களி னால் ஏற்படும் பாவங்களை இது நீக்குகிறது.

பிரபோதினி அனுட்டிக்கும் பரான்ன நியம முடையவன் சாந்த்ராயண பலனைப் பெகிறான். வேதாந்த விசாரம் செய்பவன் ஆயிரம் யாக பலனை அடைகிறான்.

பற்பல தானங்களினால் ஏற்படும் பலன்களும் பல மந்த்ர ஜபங்களால் கிடைக்கும் பலன்களும் இந்த ஏகாதசி இரவில் ஹரிகதா ச்ரவணத்தினால் கிடைக் கின்றன. பாகவதாதி புராணங்களில் ஓர் அத்யாயத்தில் ஒரு சுலோகமோ, பாதியோ, கால் பாகமோ சிரத்தை இல்லாமல் கேட்டாலும் 100 கோதான பலனைப் பெறுகிறான். சிரத்தையுடன் கேட்பானாயின் விஷ்ணு லோகத்தை அடை கிறான்.



ஒவ்வொரு பக்தரும் தாங்கள் தரிசனத்திற்கு வரும் பொழுது தமது இல்லத்திலிருந்து ஸ்வாமிக்காக சேகரித்து வைத்த உண்டியல் தொகையை எடுத்து வந்து ஸ்வாமி தரிசனத் திற்கு பின்னர் உண்டியலில் சேர்ப்பது ஒரு வழக்கமாக கொண்டுள்ளனர். தற்பொழுது நினைத்த மாத்திரத்திலேயே ஸ்வாமிக்கு உண்டியலில் இணைய தளம் வாயிலாக இ-உண்டி வழியாக பணத்தை செலுத்தலாம்.

இந்த ஏகாதசி இரவில் பகவானது நாமங்களை இசைக் கூட்டிப் பாடியவர்கள் திரும்பி சம்சாரத்தில் உழன்ற தாக சரித்திரம் இல்லை. இன் றிரவு நாம சங்கீர்த்தனம், நடனமாடுதல், மிருதங்காதி வாத் யங்களை வாசித்தல், புஷ்பங் களால் அர்ச்சித்தல், பழங்களை நிவேத னம் செய்தல், சங்கு கொண்டு திருமஞ்சனம் செய்தல், கற்பூர ஆரத்தி எடுத்தல் இவற்றில் ஒவ்வொன்றினாலும் பகவான் மிகப் பிரீதியாகிறான்.

இந்த ஏகாதசியில் புராணத்தைப் படிக்கச் செய்து பௌராணிகரை உபசரிப்பது மிகவும் புண் ணியம். இன்று பகவானுக்கு தாழம்பூ சமர்ப்பித்தல் ஏற்றம்.

அத்திப் பூவைக் கொண்டு அர்ச்சிப்பவன் யம லோகத்தைக் காண மாட்டான். ஓராண்டில் வருகின்ற எந்த ஏகாதசியும் இந்த பிரபோதினிக்கு நேர் ஆகா என்று நாரதரிடம் பிரம்மா கூறினார். அதை நான் உனக்கு சொன்னேன் என்று கண்ணன் தர்மபுத்திரரி டம் கூறினார்.

தொடரும்....

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

நைமிசாரண்யத்தில் சௌனகாதி முனிவர்களுக்கு சூதர் வேங்கடாசலத்தின் பெருமைகளையும், அம்மலைக்கான பல்வேறு பெயர்களையும் விவரித்துக் கொண்டிருந்தார். முனிவர்களுக்கும் வேங்கடாசத்தின் பல்வேறு பெயர்களைக் கேட்டவுடன் ஆர்வம் மேலோங்கியது. சூதரும் அம்மலையின் சிறப்புகளை மேற்கொண்டு கூறலானார்.

திருமலைக்கு "நரசிம்ம கிரிந்தர" என்றும் பெயர். மஹாவிஷ்ணு, பிரகலாதனின் சொல்லை மெய்ப்பிக்கும் பொருட்டு, நரசிம்மன் அவதாரம் எடுத்து இரண்யகசிபுவைக் கொன்று அழித்த காரணத்தால் நரசிம்மகிரிந்தர எனும் பெயர் பெற்றது.

மற்றுமொரு அதிசயித்தக்கக் கதையொன்றும் கூறப்படுவதுண்டு. அஞ்சனா தேவி இம்மலையில் தவம் செய்தாள் என்றும், அனுமனைப் பெற்றெடுத்ததும் இம்மலையிலேயே என்பதை அறிந்த தேவர்கள் அந்தத் தாய்க்குப் பெருமை சேர்க்கும் விதமாகவும், அந்தத் தாயின் நினைவாகவும் "அஞ்சனாத்ரி" என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர் என்பர்.



இன்னொரு செய்தியும் உங்களுக்குச் சொல்கிறேன். இந்த மலைமேல் வராக சந்நதிகள் மிகவும் அதிகமாக இருந்தன. மேலும், காக்கும் கடவுளான விஷ்ணு வராக மூர்த்தியாக தங்கியிருப்பதாலும் இம் மலைக்கு "வராகாத்ரி" எனப் பெயர் வந்தது.

ஒரு சமயம் நீலகன் என்பவன் இம்மலை மீது நெடு நாள் வாசம் செய்து வந்ததினால் "நீலகிரிந்தர" என்றும் பெயர்.

எல்லாவற்றைக் காட்டிலும் நான் இப்பொழுது சொல்லப்போகும் விஷயத்தை கவனமாகக் கேளுங்கள். இது "ஸ்ரீ" க்கு நிவாசம். மக்களின் கோரிக்கைகள் எல்லாம் தீர்த்து வைக்கும் ஹரி இம்மலை மீது உள்ளதால் இம் மலை "ஸ்ரீநிவாசம்" ஆனது.

அது மட்டுமல்ல! மற்றொரு பெயரும் உள்ளது. இம்மலை "ஆனந்தாசலம்" என்றும் அழைக்கப்படுகிறது.



இலட்சுமி தேவியைத் தன் மார்பினில் வாசம் செய்ய வைத்ததினால் ஸ்ரீநிவாசன் ஆனார். பக்தர்களின் வேண்டுதலை வேண்டியவாறு நிறைவேற்றுவதினால் பக்தர்கள் ஆனந்த பரவசம் அடைகிறார்கள். எனவே, இம்மலை "ஆனந்தாசலம்" என்றானது.

ஸ்ரீசதி வரகிரிமேல் எப்பொழுதும் வாசம் செய்வதினால் இந்தப் பிரதேசம் முழுவதும் சிறப்பு பெற்று விளங்குகிறது. எனவே, இம்மலையை "ஸ்ரீசத்கிரி" என்றும் அழைப்பர். ஸ்ரீஹரி இலட்சுமி முதலானவர்களோடு எப்பொழுதும் மகிழ்ச்சியாக கிரிடாசலத்தில் தம் திருவடி படும்படி சுற்றித் திரிவதால் பூதலத்தில் உள்ள எல்லா மலைகளைக் காட்டிலும் "கிரிடாசலம்" சிறப்பு மிக்கதாகத் திகழ்கிறது.

எத்தனையோ பெருமைகளைக் கொண்டதாகத் திகழும் கிரிடாத்ரியை கருடாழ்வான் வைகுண்டத்திலிருந்து பூலோகத்திற்குக் கொண்டு வந்ததினால் அதற்குக் "கருடாத்ரி" எனப் பெயர். புராண சம்மந்தமான ஒரு விஷயத்தைச் சொல்கிறேன் கேளுங்கள்.

ஸ்ரீஹரி பாம்பின் மேல் பள்ளி கொண்டிருப்பவன். அதனால் இம்மலை பார்ப்பதற்கு பாம்பின் வடிவத்தோடு காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. பூலோகத்தில் இம்மலையைத் தரிசிப்பவர்க்குச் "சேஷாசல"மாகத் திகழ்கிறது.

இந்த அசலம் அனேக வகையான தர்மங்களுக்கு நிலையமாகும். மேலும், மக்களுக்கு தர்ம சிந்தனையை உண்டாக்கும் புண்ணிய பர்வதமாகும். அதனால் இம்மலை "வ்ருஷாத்ரி" எனவும் அழைக்கப்படுகிறது.

மேலும், மேலான விஷயத்தை சொல்கிறேன். இம்மலை மழை வளத்திற்குக் காரணமாக விளங்குவதோடு, மக்களின் துன்பங்களைப் போக்கும் இடமாகவும் திகழ்ந்து, அனைத்து செல்வங்களையும் தந்து வளமான வாழ்வுக்குக் காரணமாகவும் இருப்பதினால் "வேங்கடாத்ரி" எனப் பெயர் பெற்று புகழ் பெற்று விளங்குகிறது.

இம்மலைக்கு உள்ள பெயர்கள் அத்தனையும் விளக்கிச் சொன்னாலும், கல்பங்கள் தோறும் இம்மலை வெவ்வேறு பெயர்களோடு சிறப்பு பெற்று வருகிறது. இந்த மலையின் மாஹாத்மியம் இவ்வளவுதான் என்று சொல்வது இயலாத காரியம். நான்முகம் கொண்ட பிரம்மா, ஆறுமுகம் கொண்ட சுப்பிரமணியம், ஏன்? ஆயிரம் முகம் கொண்ட சுவாமியே ஆனாலும் இம்மலையின் பெருமையை வருணிக்க முடியாது.

இவ்வளவு சிறப்பும் பெருமையும் கொண்ட இம்மலைமேல் ஸ்வாமி வடக்கு முகமாக இருந்து இரமாகாந்தனாக பர்வதம் முழுவதும் வியாபித்து இருக்கிறார் எனச் சூதர் சொல்லவும், ஸ்ரீஹரி பற்றிய விசேஷங்களை மேலும் தங்களுக்குச் சொல்ல வேண்டும் என சௌனகாதி முனிவர்கள் கேட்டுக் கொண்டனர்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்,
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

தொடர்ந்து தரிசிப்போம்...

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 87க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | த் | யா | ப | க | ர் | க | ள் | ன் | வ | ரு | 2 கு |
| ன | | 3 நா | ன் | கு | கா | ல் | ம | ண் | ட | ப | ம் |
| ந் | | 4 ச | ம் | ர | பூ | ற் | க | க் | சை | ச் | 5 ப |
| தா | | ஹ | ஜி | வா | பா | ம் | ரா | தி | 6 ஹ | 7 வ | ட |
| ழ் | வை | ஸ் | 8 பா | ஷ் | ய | கா | ர | ர் | 9 டோ | ச | ண் |
| வா | சே | ர | கை | ங் | க | ச | கா | 10 ஆ | லோ | ந் | ம |
| ன் | டை | தீ | 11 ஸ் | ந | ப | ன | ம | னி | ற் | தோ | ய |
| தோ | வா | ப | 12 ஸா | மூ | ஹி | க | ர் | வ | ஸ | த் | ரா |
| ட் | பா | | | ஜா | ர | 13 வி | 14 த | ர | வ | ஸ | லை |
| ட | ப் | 15 ஸ்ரீ | நி | வா | ச | க | த் | ய | ம் | வ | ம |
| ம் | ரு | 16 நி | ஜ | பா | த | த | ரி | ச | ன | ம் | ரு |
| | 17 தி | | ள் | க | பி | ம் | ந | லை | ம | ரு | 18 தி |



# மங்களாசாசனம்

01) ச்ரிய: காந்தாய கல்யாணநிதயே நிதயேர்த்தினாம் ।
ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் ॥

02) லக்ஷ்மீ ஸவிப்ரமாலோக ஸுப்ரூ விப்ரம சக்ஷுஷே ।
சக்ஷுஷே ஸர்வலோகானாம் வேங்கடேசாய மங்களம்

03) ஸ்ரீவேங்கடாத்ரி ச்ருங்காக்ர மங்களாபரணாங்க்ரயே
மங்களானாம் நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் ॥

04) ஸர்வாவய வஸௌந்தர்ய ஸம்பதா ஸர்வசேதஸாம் ।
ஸதா ஸம்மோஹனாயாஸ்து வேங்கடேசாய மங்களம்

05) நித்யாய நிரவத்யாய ஸத்யானந்த சிதாத்மனே ।
ஸர்வாந்தராத்மநே ஸ்ரீமத் வேங்கடேசாய மங்களம் ।

06) ஸ்வத ஸ்ஸர்வவிதே ஸர்வ சக்தயே ஸர்வசேஷிணே ।
ஸுலபாய ஸுசீலாய வேங்கடேசாய மங்களம் ॥

07) பரஸ்மை ப்ரஹ்மணே பூர்ணகாமாய பரமாத்மனே ।
ப்ரயுஞ்ஜே பரதத்த்வாய வேங்கடேசாய மங்களம் ॥

08) ஆகாலதத்த்வ மச்ராந்த மாத்மனா மனுபச்யதாம் ।
அத்ருப்த்யம்ருத ரூபாய வேங்கடேசாய மங்களம் ॥

09) ப்ராயஸ் ஸ்வசரணௌ பும்ஸாம் சரண்யத்வேன பாணினா ।
க்ருபயாऽऽதிசதே ஸ்ரீமத்வேங்கடேசாய மங்களம் ॥

10) தயாம்ம்ருத தரங்கிண்யா ஸ்தரங்கைரிவ சீதலை: ।
அபாங்கை ஸ்ஸிஞ்சதே விச்வம் வேங்கடேசாய மங்களம் ॥

11) ஸ்ரக்பூஷாம்பர ஹேதீனாம் ஸுஷமாவஹமூர்தயே ।
ஸர்வார்தி சமனாயாஸ்து வேங்கடேசாய மங்களம் ॥

12) ஸ்ரீவைகுண்ட விரக்தாய ஸ்வாமி புஷ்கரிணீதடே ।
ரமயா ரமமாணாய வேங்கடேசாய மங்களம் ॥

13) ஸ்ரீமத்சுந்தர ஜாமாத்ருமுனி மானஸவாஸினே ।
ஸர்வலோக நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் ॥

14) மங்களா சாஸன பரைர்மதாசார்ய புரோகமை: ।
ஸர்வைச்ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம் ॥

– மங்களாசாசனம் சம்பூர்ணம் –

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



**ஆந்திர மாநில அரசால்
2023, ஆகஸ்ட் மாதத்தில்
தி.தி.தேவஸ்தானத்திற்கு
புதியதாக நியமிக்கப்பட்டு
பொறுப்பேற்றுக்கொண்ட
பொறுப்பாண்மைக்குழுத்
தலைவர் மற்றும்
உறுப்பினர்கள்**



திரு. பூமண கருணாகர ரெட்டி,
எம்.எல்.ஏ., திருப்பதி.
தலைவர்



திரு. பொன்னாட வெங்கட
சதிஷ் குமார் எம்.எல்.ஏ.
உறுப்பினர்



திரு. உதயபானு சாமினேனி
எம்.எல்.ஏ.
உறுப்பினர்



திரு.எம். திப்பே ஸ்வாமி
எம்.எல்.ஏ.
உறுப்பினர்



திரு. சித்தவடம் யானாதய்யா
உறுப்பினர்



திரு. சந்தே அஷ்வர்த நாயக்
உறுப்பினர்



திரு. மேகசேஷபாபு
உறுப்பினர்



திரு. ஆர். வெங்கட
சுப்பா ரெட்டி
உறுப்பினர்



திரு.ஒய். சீதாராம ரெட்டி
உறுப்பினர்



திரு. ஜி.வெங்கட சுப்பாராஜு
உறுப்பினர்



திரு. பெனக சரத் சந்திரா ரெட்டி
உறுப்பினர்



திரு. ராம்ரெட்டி சாமுலா
உறுப்பினர்



திரு. பாலசுப்ரமணியன்
பழனிச்சாமி
உறுப்பினர்

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## தி.தி.தேவஸ்தானத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுக்கொண்ட பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள்



திரு. எஸ்.ஆர். விஸ்வநாத் ரெட்டி
உறுப்பினர்



திருமதி கட்டம் சீதா ரெட்டி
உறுப்பினர்



திரு. கிருஷ்ணமூர்த்தி வைத்தியநாதன்
உறுப்பினர்



திரு. சித்தாவீர வெங்கட சுதீர்குமார்
உறுப்பினர்



திரு. சுதர்ஷன் வேணு
உறுப்பினர்



திரு. நெருசுநாகசத்யம்
உறுப்பினர்



திரு.ஆர்.வி. தேஸ்பாண்டே
உறுப்பினர்



திரு. அமோல்காலே
உறுப்பினர்



டாக்டர் எஸ். சங்கர்
உறுப்பினர்



மிலிந்த் கேசவ் நர்வேகர்
உறுப்பினர்



டாக்டர் கேதன் தேசாய்
உறுப்பினர்



திரு. போரா சௌரப்
உறுப்பினர்



திரு. ஆர். கரிகால வளவன் ஐ.ஏ.எஸ்.
சிறப்பு தலைமைச் செயலாளர்
ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறை,
பதவி அடிப்படையில் உறுப்பினர்



திரு. எஸ். சத்ய நாராயணா ஐ.ஏ.எஸ்.
ஆணையர், ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறை,
பதவி அடிப்படையில் உறுப்பினர்



திரு. செவிரெட்டி மோஹித்ரெட்டி
T.U.D.A. தலைவர்
பதவி அடிப்படையில் உறுப்பினர்



திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ்.
தி.தி.தே. செயலாட்சித்தலைவர்,
பதவி அடிப்படையில் உறுப்பினர்

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்





27–08–2023 முதல் 29–08–2023 வரை திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெற்ற பவித்ரோத்ஸவத் திருக்காட்சிகள். இவ்வுத்ஸவத்தில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் மற்றும் தி.தி.தே. உயரதிகாரிகள்



02–09–2023 அன்று திருமலையில் உள்ள வைகுண்டம்–2 வழியாக சர்வதரிசனத்திற்குச் செல்லும் பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகளைக் குறித்து ஆய்வு செய்யும் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு.பூமண கருணாகர ரெட்டி அவர்கள்.



16–08–2023 அன்று திருப்பதியில் அமைந்துள்ள தி.தி.தே.ஆலயங் களில் ஸ்வாமி தரிசனம் செய்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பூமண கருணாகர ரெட்டி அவர்களுடன் தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் திரு. வி. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள்.




04–09–2023 முதல் 06–09–2023 வரை திருப்பதியில் உள்ள எஸ்.வி.பாரம்பரிய சிற்பக் கலை மற்றும் கட்டடக் கலை கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி பட்டறையில் கலந்து கொண்ட தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் மற்றும் தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் (எச்.&இ)




21–08–2023 அன்று கோடி அனுமன் சாலிசா பாராயண மஹாயக்ஞ ரதயாத்திரை துவக்க விழாவில் பங்கு கொண்ட தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் (எச்.&இ) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்

உற்சவ காலங்களில் திருமலையில் ஏழுமலையானின் திருக்கோயிலைச் சுற்றி நடைபெறும் ஊர் வலங்களைக் கண்டுகளிப்பது ஓர் தெய்வீக அனுபவத்தைத் தரும். மலையப்பனின் திருஉருவச் சிலையை வெவ்வேறு வாகனங்களின் மேல் வைத்து பவனி வருவது கண்களுக்கு விருந்து படைக்கும். அத்தோடு யானை, காளை மற்றும் குதிரை போன்ற மாக்களாகிய விலங்குகள் இந்த ஊர்வலத்தில் சேர்ந்தால் அனைவரின் பார்வையையும் இந்த அற்புதக் காட்சி அள்ளிச் செல்லும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.

இந்துக் கோயில்களில் விலங்குகளின் பங்களிப்பு பாரத நாடெங்கும் ஓர் தொன்று தொட்டு வரும் கலாச்சாரம். இமயம் முதல் குமரி வரையிலான பழமை வாய்ந்த கோயில்களில் விலங்குகளுக்கு ஓர் சிறப்பு இடம் உண்டு. முக்கியமாக யானைகளும், பசுக்களும் கோயில்களின் ஓர் அங்கமாகக் கருதப்படுகின்றன.

திருமலை ஊர்வலங்களில் யானைகள் ஒரு முக்கிய பங்கு வகிக்கும். ஜொலிப்புமிக்க ஒரு நிகழ்வாக கருதப்படும் வருடாந்திர பிரம்மோத்ஸவத்தின் போது காளையும், குதிரையும் இந்த அணிவகுப்பில் சேரும்.

நமது இந்து சமயத்தில் விலங்குகளை உபயோகிப்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை. யானை செழிப்புக்கும், பொருள் வளத்திற்கும், ஐஸ்வரியத்திற்குரிய சின்னம். இதனாலேயே நாம் இந்த கஜத்தை செல்வத்தின் பிறப்பிடமான மஹாலக்ஷ்மியின் வாகனமாக பார்க்கிறோம். யானை எந்த ஒரு கோயில் சார்ந்த பொது நிகழ்ச்சிகளிலும் முதலி டம் பெறுவதற்கும் இதுவே காரணம்.

அதே போல் காளை என்பது அறத்திற்கும், நற்சிந்தனைக்கும் சின்னமாகக் கருதப்படுகிறது. குதிரை வீரத்தையும், ஆளுமையையும் குறிக்கும். வேதங்களிலும் மற்றும் பழம்பெரும் நூல்களிலும் குறிப்பிட்டது போன்ற ஒரு தார்மீகமான வாழ்க்கை வாழ்வதற்கு மனிதனுக்கு இவை மூன்றும் தேவை. இந்த ஒப்பற்ற தத்துவத்தை மக்களுக்கு நிரந்தரம் உணர்த்தவே இவ்விலங்குகளை கோயில் ஊர்வலங்களில் உலா வரச் செய்வதாக ஒரு கோட்பாடு உண்டு. திருமலையில் ஊர்வலங்களில் உபயோகப்படுத்தப்படும் விலங்குகளை கவனிக்க திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் கீழ் திருப்பதியில் ஒரு கோசாலை நிறுவியிருக்கின்றனர். இங்கு



# திருமலையில் மாக்கள் செய்யும் சேவை

–திரு.அத்தி ரங்கராஜன்,
திருப்பதி,
99627 88065.



ஏழு யானைகள், முப்பது காளைகள் மற்றும் நான்கு குதிரைகள் உள்ளன. ஏழுமலையானின் புகழ் பாரெங்கும் பரவி இருப்பதனால் திருமலை என்பது வருடத்தின் ஒவ்வொரு நாளும் பக்தர்கள் கூட்டம் நிறைந்து காணப்படும் ஒரு புண்ணிய தலம் ஆகும். பல திருக்கோயில்களில் இருப்பதுபோல், ஒரு சில நாட்களில் கூட்டம் நிறைந்தும், சில நாட்களில் குறைவாகவும் இங்குக் காண முடியாது. பிரம்மோத்ஸவம் மற்றும் இதர முக்கிய விசேஷ நாட்களில் கூட்டம் அலைமோதும். மற்ற நாட்களில் காணப்படும் கூட்டத்திற்கு இரு மடங்காக உயர்ந்து, பக்தர்களை மூச்சு முட்டச் செய்யும்.

திருமலையில் இரைச்சலுக்கு பஞ்சம் இல்லை. பக்தர்களின் “கோவிந்தா கோவிந்தா” என்ற கோஷமும், ஒலிப்பெட்டிகளின் மூலம் ஒலிபரப்பப்படும் வேத மந்திரங்களும், ஆன்மீக சொற்பொழிவும், பக்திப் பாடல்களும், கோயிலைச் சுற்றி இருக்கும் சாலைகளில் வாகனங்களின் ஹாரன் ஒலியும் சேர்ந்து சத்தம் வானைப் பிளக்கும். இந்த ஒலியினால் அந்த விலங்குகள் சீற்றம் அடையாமல், சாந்தமான முறையில் ஊர்வலத்தில் நடந்து வரும்படி செய்வது அந்த விலங்குகளின் காப்பாளர்களுக்கு மிகவும் கடினமான ஒரு விஷயமாகும்.

இதற்காகவே பிரம்மோத்ஸவத்திற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே இந்த கோசாலையில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் விலங்குகளுக்கும் அவற்றின் காப்பாளர்களுக்கும் நடைபெறும். யானையும், குதிரையும், காளையும் ஒன்றைக்கண்டு ஒன்று மிரண்டு போகாமல் இருக்க அவற்றை ஒன்றாக பழக விடுவார்கள். காளையையும், குதிரையையும் ஒன்றாக நடக்க வைப்பர். அவற்றின் நடுவே உள்ள இடைவெளி குறைய, மிரட்சி குறைந்து, அச்சுறுத்தல் போன்ற உணர்வு நீங்கி, நட்பு வளரும்.

அதேபோல், ஊர்வலத்தின் போது விலங்குகளுக்கு அணிவிக்கப்படும் அங்கிகளும், அலங்காரப்பொருட்களும், இந்தப் பயிற்சி நாட்களிலேயே அணிவிக்கப்பட்டு அவற்றை நடக்க விடுவார்கள். இந்த ஒன்றோடொன்று பழக்கப்படுத்துதல், அங்கி அணிவிக்கப்படுதல் போன்ற செயல்களினால், உண்மையான ஊர்வலத்தின் போது எந்த ஒரு அசம்பாவிதமும் நடக்காமல் இருக்க உதவும். உத்ஸவ தினங்களில் பக்தர்கள் கூட்டம் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது கடினம். அதனால், விலங்குக் காப்பாளர்கள் இந்த விலங்குகளை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ள முயற்சிப்பர். அதற்கான சிறப்புப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படும். விலங்குகள் ஒரே பாதையில் நடக்க வேண்டும். ஒரே



வேகத்தில் நடக்க வேண்டும் மற்றும் நகரச் சொல்லும் வரை ஒரே இடத்தில் நிற்க வேண்டும்.

அவற்றிற்கு நிரந்தரம் உணவு அளித்துக் கொண்டே இருந்தால்தான் அவற்றின் கவனம் அலைமோதும் பக்தர்களின் கூட்டத்தின் மீதும், அவர்களின் கூச்சலின் மீதும் சிதறாமல் இருக்கும். பிரம்மோத்ஸவத்தின் போது ஒன்பது நாட்களும் இந்த விலங்குகளுக்குச் சிறப்பான உணவு அளிப்பர். அவற்றிற்கு பிடித்தமான பொருட்களை தீனியாகக் கொடுப்பதன் மூலம் அவற்றைச் சாந்தமாக இருக்கச் செய்யும் உபாயம் தான் இது.

ஊர்வலத் தொடக்கத்திலும், முடிவிலும், பகவானுக்கு ஆரத்தி கொடுக்கும் இடங்களிலும் நிறைய நேரம் மலையப்பனின் வாகனம் நிற்க வேண்டி இருப்பதால், விலங்குகளுக்கு உணவும், தண்ணீரும் இந்த நேரத்தில் முன்னதாகவே ஏற்பாடு செய்து வைப்பார்கள். முக்கியமாக, கோயிலின் நுழைவு வாயிலருகேயும், வராக ஸ்வாமி கோயில் அருகேயும், கோயிலின் வடமேற்கு மூலையிலும் அதிக நேரம் நிற்க வேண்டியிருப்பதால் இங்கு விலங்குகளுக்கு உணவு அளிக்கப்படும். கேரள ஆலயங்களில் யானைகளை அதிகமாக உபயோகிப்பார்கள். அங்கு விலங்குகள் மிகுந்த நேரம் நிற்கவும் வேண்டி இருக்கும். இதனால் அம்மாநிலத்தின் கோயில்களில் கடைபிடிக்கப்படும் விதிமுறைகளைக் கவனித்து இங்கேயும் நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள்.

வீதி உலா வரும் நாட்களில் விலங்குகளுக்கு காலையிலேயே குளத்தில் இறக்கி, உடம்பு தேய்த்து குளிப்பாட்டி விடுவார்கள். அவற்றின் உடல் அசதி, அலுப்பு நீங்கி, மனதில் நிம்மதியாக ஒரு உணர்வு கொண்டு வரவே இந்த ஏற்பாடு. ஊர்வலத்தின்போது யானைகளுக்கு கேழ்வரகு கவளம், அரச மரக்கிளை மற்றும் ஆலமர விழுது, கரும்பு, வெல்லம் மற்றும் வாழைத்தார் போன்றவை உண்ண அளிப்பார்கள்.

ஊர்வலத்தின் போது பக்தர்கள் உணர்ச்சி வசப்பட்டு விலங்குகளிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காக மிக அருகில் வந்து விடுவார்கள். சற்றும் எதிர்பாராத இந்தச் செயலினால் அவை மிரண்டு போகும் வாய்ப்பும் உண்டு. அதனால் அப்படி யாரும் திடீரென நெருங்காமல் காப்பாளர்கள் பார்த்துக் கொள்ள அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பக்தர்களுக்கும் மிக அருகில் செல்ல வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுத்துக்கொண்டே இருப்பார்கள்.

ஏழுமலையானின் ஊர்வலங்களில் பங்கு பெறும் இந்த கம்பீரமான விலங்குகள் ஒரு அலங்காரமாக மட்டும் அல்லாமல் திருமலையின் ஒரு அடையாளமாகவே ஆகி விட்டன என்றால் அது மிகை ஆகாது.

## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.13 ஆகஸ்ட் 2023 விடைகள்

1. வைகாசி – கேட்டை
2. பொய்கையாழ்வார்
3. கருடாழ்வார்.
4. வாதிராஜர்.
5. பாரதியார்.
6. ஆவணி–வெள்ளிக்கிழமை.
7. பராசரபட்டர்.
8. விநதை, கத்ரு.
9. விந்திய மலை.
10. அகத்தியர்.
11. தர்ப்பைப் புல்லின் நுனி.
12. கனக விமானம்.
13. அஜா, பத்மா.
14. அருணகிரி நாதர்.
15. நரசிம்மரின் நகங்கள்.



## போட்டி எண். 13




**சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி ஜி.லக்ஷனா
   அண்ணாநகர் மேற்கு,
   சென்னை.
2. செல்வி ப.எ.லோகப்பிரியா
   சிங்கப்பெருமாள் கோவில்,
   செங்கல்பட்டு.
3. செல்வன் எல்.ஆர்.மாதவ ஸ்ரீநிவாஸ்
   தண்டல், ஈரோடு.



# என் உள்ளம் கவர் வேங்கடவா


–திரு. ஆர். கண்ணன், பெங்களூரு,
93435 83416


உலகிலேயே அதிக அளவில் பக்தர்கள் நாள்தோறும், அதிகாலை முதல் நள்ளிரவு வரை தரிசிக்கும் திருத்தலம் திருமலை என்றால் மிகையாகாது. ஸ்ரீகோதை நாச்சியார் அருளிச் செய்தபடி, **"சென்று நாம் சேவித்தால் ஆவாவென்று அருள்வான்"** என்பதை உணர்த்தும் திவ்ய தேசம் திருவேங்கடம். நித்ய ஸூரிகளின் அம்சமான ஆழ்வார்கள் மட்டுமின்றி, எம்பெருமானிடம் மனதை முற்றும் செலுத்தியவர்களான ரிஷி முனிவர்களால் கொண்டாடப்பட்டவனே திருவேங்கடவன். வியாச மஹரிஷியால் அருளிச் செய்யப்பட்ட வராக புராணம் மற்றும் ஸ்காந்த புராணம் முதலியவைகளில் திருவேங்கடவன் போற்றிப் புகழப்படுகிறான். இப்புராணங்களில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் சிறப்புடன் விளங்குகிறது.

திருமலைநம்பிகள் நித்ய வாசம் செய்து திருவேங்கடவனுக்கு தீர்த்த கைங்கர்யம் செய்தார். இவ்வாசார்யரின் வம்ச பரம்பரையில் வந்தவர்கள் இன்றும் தீர்த்த கைங்கர்யம் செய்து வருகின்றனர் என்றாலே அதை அறிந்து நம் உள்ளம் மகிழ்கிறது.

ஸ்ரீராமாநுஜர் உகந்த திருத்தலம் திருவேங்கடம். திருவேங்கடவனுக்கு சங்கு சக்ர கவசங்களை அளித்து உகந்தவர். திருமலையின் புனிதத்தை உத்தேசித்து முழங்காலாலேயே படியேறி உகந்தவர்.

திருமலை அடிவாரத்தில், திருமலை நம்பிகளிடம் ஒரு வருட காலம் காலக்ஷேபம் செய்து ஸ்ரீமத் ராமாயணத்தின் முக்கியப் பொருட்களை ஸ்ரீராமாநுஜர் அறிந்தார் என்பது சரித்திரம். ஸ்ரீராமாநுஜருக்கு மட்டும் திருமலைத் திருக்கோயிலினுள்ளே தனி சந்நிதி இருப்பதைப் பார்க்கும்போது, திருவேங்கடவனுக்கும் இவ்வாசார்யருக்குமுள்ள தொடர்பை சிறப்பை உணர முடிகிறது.

ஸ்ரீராமாநுஜருடைய நியமனத்தால் அநந்தாழ்வான் திருமலைக்கு எழுந்தருளி நந்தவனம் அமைத்துத் திருவேங்கடவனுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தது அனைவரும் அறிந்ததே. அவர் உபயோகித்த கடப்பாரையை நாம் இன்றும் திருக்கோயிலின் மஹாத்வாரத்தில் கண்டு மகிழலாம். இவ்வாசார்யருக்கும் திருமலையிலேயே திருவரசு ஆலயத்தின் தென்மேற்கு மாடவீதியில் அமைந்து உள்ளது.

சுவாமி தேசிகன் திருவேங்கடவனுடைய அம்சாவதாரமோ அன்றி அவனுடைய திருமணி அவதாரமே என்பர் பெரியோர்கள். சுவாமி தேசிகன் திருவேங்கடவனின் கருணைக்குப் புகழ் பாடும் வகையில் "தயா சதகம்" ஸ்தோத்ரத்தின் முடிவில் (100), பரமபதத்தில் முக்தர்கள் பெறும் அநுபவத்தை இங்கேயே திருவேங்கடவன் தன் தயையினால் தூண்டப்பட்டு அனுசந்திக்கும்போது வேங்கடவனின் கருணை நம் மீது வெள்ளமிட்டுப் பாயும் என்பதில் எந்த ஐயமுமில்லை என்கின்றார். இந்த ஆசார்யனுக்குள்ள திருவேங்கடவன் மீதான பக்தியைக் காணும்போது உள்ளம் குழைகிறது. கண்ணீர் பெருகுகிறது. குரல் தழுதழுக்கிறது. மனதை எம்பெருமான் கொள்ளை கொண்டு போகிறான்.

மணவாள மாமுனிகள் திருவுள்ளத்திலும் குடி கொண்டிருந்தவர் திருவேங்கடவன். இதனை வேங்கடேச மங்களத்தில் *''ஶ்ரீமத் ஸுந்தர ஜமாத்ரு முனி மானஸ வாஸிநே''* என்ற பதங்களினின்றும் தெளிகிறோம்.

திருமலைக்கே ஏற்பட்ட பெரிய ஜீயர் மற்றும் சின்ன ஜீயர்கள் திருவேங்கடவனுக்குச் செய்யும் கைங்கர்யங்கள் வார்த்தைகளால் சொல்ல முடியாதது. அவர்கள் தங்களை திருவேங்கடவ னுக்கே அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள் என்றால் மிகை ஆகாது. இப்படிப்பட்ட ஆசார்யர்கள் கைங்கர் யங்களால் நமது உள்ளம் திருவேங்கடவன்பால் இழுக்கப்படுகின்றன.

ஆழ்வார்கள், ரிஷி முனிவர்கள் மற்றும் ஆசார்ய சிரேஷ்டர்கள் ஈடுபாடு ஒரு புறமிருக்க சாதாரண பக்தர்களின் ஈடுபாடு உயர்ந்த நிலையைக் காட்டு கிறது. பண்டிதன் முதல் பாமர பக்தர்கள் வரை எந்த வேறுபாடுமின்றி திருமலைக்கு யாத்திரையாக வருகிறார்கள். தங்கள் குறைகளை, வேண்டுதல் களை திருவேங்கடவனிடம் சமர்ப்பிக்க எண்ணு

## வாரந்தோறும் நடைபெறும் சிறப்பு நிவேதனம்

நாள்தோறும் சமர்ப்பிக்கப்படும் நிவேதனங்களுடன் ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் காலை திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெறும் விசேஷ பூஜையில் பெரிய வடை, லட்டு, அன்னப்பிரசாதங்கள் ஆகியவற்றை நிவேதனம் செய்வர்.

அவ்வாறே ஒவ்வொரு புதன்கிழமை தோறும் காலை தங்க வாயிலின் அருகே நடைபெறும் சஹஸ்ர கலசாபிஷேகத்தில் ஸ்வாமிக்கு க்ஷீரான்னத்துடன் மற்றுமுள்ள அன்னப் பிரசாதங்களையும் நிவேதனம் செய்வர்.

ஒவ்வொரு வியாழக்கிழமை அன்றும் “திருப்பாவாடை” என்கிற சேவையைச் செய்கின்றனர். இந்த சேவையில் சுமார் 420 கிலோ அரிசியால் தயார் செய்த புளிசாதத்தை ஸ்வாமியின் மூல மூர்த்திக்கு எதிராக உள்ள தங்க வாயிலின் முன் பெரிய குவியலாகப் போட்டு ஸ்வாமிக்கு நிவேதனம் செய்வர். இதனுடன் பெரிய ஜிலேபி, முறுக்கு ஆகியவற்றையும் சமர்ப்பிப்பர். வெள்ளிக்கிழமை அன்று ஶ்ரீநிவாசருக்கு போளியைச் சமர்ப்பிப்பர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அன்றும் வெல்லம் கலந்த அரிசிமாவை நிவேதனமாகச் சமர்ப்பிப்பர். இந்த மாவை அமிர்த கலசம் என்பர். பின்னர் அமிர்த கலச பிரசாதத்தை கருடாழ்வாருக்கு நிவேதனமாக அளிப்பர்.

இது மட்டுமல்லாமல் ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி ஆகிய நன்னாட்களில் ஸ்வாமிக்கு தோசை, கடலைப்பருப்பினால் தயார் செய்த சுண்டல் ஆகியவற்றை நிவேதனம் செய்வர்.

இதுமட்டுமின்றி நனைந்த பாசிப்பருப்பு, வெல்லப்பானகம் ஆகியவற்றையும் நிவேதிப்பர். மார்கழி மாதத்தில் அன்னப் பிரசாதத்துடன் வெல்லத்தாலான தோசையையும் சமர்ப்பிப்பர்.



கிறார்கள். நாள்தோறும் நடந்து படியேறி மலைக்கு வருகிறவர்கள் ஆயிரக்கணக்கில் பாக்கியம் செய்த வர்கள். முண்டியடித்து முன்னேறுபவர்கள் கணக்கில் அடங்கா. ஆனால் திருவேங்கடவன் முன்னால் நிற்பது க்ஷணகாலமே. அவனிடம் வேண்ட நினைத்ததை சொல்வதற்கு முன்பே க்யூ வரிசை முன்னேறி விடுகிறது. ஆனால் எம்பெருமானுக்குத் தெரியும். அதன்படி நாம் வேண்ட நினைத்ததை உரிய காலத்தில் அளித்துக் காப்பான்.

அவன் மீது வைத்த அபார நம்பிக்கையன்றோ லக்ஷக்கணக்கான பக்தர்களைத் திருமலைக்கு ஈர்க்கின்றது. எவ்வளவு பக்தகோடிகள் வந்து தரிசித்தாலும், உற்சவங்கள் நடந்தாலும் திருவேங்கடவனுக்கு, அவனுடைய சங்கல்பத்தால் ஆகம விதிப்படி எல்லாப் பூஜைகளும் குறைவற நடந்து வருகின்றன. அவன் "குறைவொன்றுமில்லாத கோவிந்தன் அன்றோ!"

உத்ஸவ காலங்களில் தரிசிக்க வரும் பக்தர்கள் எண்ணிக்கை மிக அதிகம். அவர்கள் எல்லோரும் ஒரு நாளில் தரிசிப்பது என்பது அசாத்திய காரியம். ஆனாலும் அவர்கள் ஒரு நாளோ, இரண்டு நாளோ க்யூ வரிசையில் இருந்து பொறுமையுடன் திருவேங்கடவனை சேவிக்க விழைகிறார்கள். அவர்களுக்கு எம்பெருமானிடம் பக்தி ஒன்றே முக்கியம். அவர்களின் சேவைக்குரிய உதவிகளைச் செய்து வரும் தி.தி.தே. நிர்வாகத்தை எந்த வகையில் பாராட்டினாலும் தகும்.

திருவேங்கடவன் நித்யோத்ஸவம், பக்ஷ உத்ஸவம், மாஸோத்ஸவம், சம்வத்சர உத்ஸவம் என்றபடி நாட்கணக்கில் உத்ஸவம் கண்டு அருளுகிறான். பிரம்மோத்ஸவமும் கொண்டாடப்படுவது உண்டு. அதில் கருடோத்ஸவம் காண லக்ஷக் கணக்கில் பக்தர்கள் கூடுவதைப் காணும்போது, அவ்விடம் ஓர் கடல்போல் காட்சி அளிக்கும். அப்படிப்பட்ட அடியார்கள் குழாங்களோடு உடன் கூடுவது தான் பேரின்பம் என்கிறார்களோ? அடியார்கள் குழாங்களோடு பரமபதத்தில் எம்பெருமானுக்குச் செய்து உகக்கும் கைங்கர்யத்தையே அந்தமில் பேரின்பம் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

அதிகாலையில் நூற்றுக்கணக்கானோர் அங்கப்ரதக்ஷிணம் செய்வதையும், நாள் முழுவதும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் முடிக்காணிக்கை செலுத்தித் தங்கள் நேர்த்தி கடன்களைச் செய்து முடிப்பதையும் பார்க்கும்போது உள்ளத்தில் ஓர் பரவசம், திருவேங்கடத்தில் பக்தி ஓங்கி வளர்ந்து இருப்பதையும் உணர முடிகிறது. திருமலை எங்கும் கோவிந்தநாம சங்கீர்த்தனம் ஏழு மலைகளிலிருந்தும் எதிரொலிக்கிறது. நம் கவலைகளையெல்லாம் சற்றே மறக்கச் செய்கிறது. தெய்வீகம் உள்ளத்தில் பரவுகிறது.

திருவேங்கடவனின் அருள் ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்திச் சேனல் மூலம் உலகம் முழுவதுமுள்ள பக்தர்களைச் சென்றடைகிறது. மேலும் ஸப்தகிரி பத்திரிக்கை மூலமும் எங்கும் பரவுகிறது.

## திருமலையானிடம் சரணாகதி

*"பரன் சென்று சேர் திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே"* என்றார் நம்மாழ்வார். *''வேங்கடமே மெய்வினை தீர்ப்பதுவும்''* என்றார் திருமழிசை ஆழ்வார். *''கடு வினையர் இருவினையும் கடியும் வெற்பு. திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு''* என்றார் ஸ்வாமி தேசிகன். *''வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே''* என்று வேண்டினாள் கோதை நாச்சியார். *"உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே"* என்று திருவேங்கடவனின் திருவடியில் நம்மாழ்வார் சரணாகதி செய்தார்.

இப்படி மேன்மைகள் பொருந்திய திருவேங்கடவன் கல் போன்ற மனதுடைய அடியார்கள் மனத்துள் புகுந்து, இனிப்பேரேன் என்று உறைகின்றான். அவன் கருணையை என்னவென்று சொல்ல முடியும்.



திருவேங்கடவனின் அருளால் தொடங்கப்பட்ட வேத பாட சாலைகள், கல்லூரிகள், மருந்தகங்கள் போன்றவை மக்களுக்கு நல்ல சேவைகள் செய் கின்றன. சமீப காலத்தில் திருமலையில் தொடங்கப் பட்ட தூபம், தீபம் மற்றும் பல ஆன்மீகப் பொருட்க ளின் உற்பத்தி மற்றும் விற்பனை தெய்வீகத்தைப் பரப்ப வழி வகைச் செய்கின்றன.

நாம் பல காலங்களில் அவன் உகக்காத செயல் களைச் செய்து பாபங்களைச் சேர்த்து வைத்திருக் கிறோம். அதனால்தான் இந்த இருள் தருமா ஞாலத்தில் உழன்று, உழன்று மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றோம். இப்போது, நல்லறிவு பிறந்து, திருவேங்கடம் சென்று அவனை உள்ளம் குளிர தரிசித்து வேண்டினால், நாம் செய்த பாபங்களை எல்லாம் அவன் கழித்து விடுவான். இது சாஸ்த்ர ப்ரமாணம். நாம் பாபங்கள் கழிந்து நற்கதி அடைய வேண்டாமா? உடனே திருமலை சென்று திருவேங்கடவனை வழிபடுவோம். பிறவிப்பயனை அடைவோம்.




ஸப்தகிரி மாத இதழுக்கு 1970 ஆம் ஆண்டு முதல் சந்தாதாரராக இருக்கிறேன். ஸப்தகிரி இதழ் மூலம் திருவேங்கடமுடையான் தனது ஆசிகளை எனக்கு வழங்கிக் கொண்டே இருக்கிறார். எங்கள் இல்லத்தில் ஏதேனும் சுப நிகழ்வு நடந்தால் அன்றைய தினம் தபால் மூலம் அந்த மாதத்திற்குரிய ஸப்தகிரி இதழ் எங்கள் இல்லத்துக்கு வந்து சேரும்.

நான் சொந்த வீடு வாங்குவதற்காக ஒப்பந்தம் கை எழுத்திட்ட நாளிலும், வீட்டுப் பத்திரங்கள் பதிவு செய்த நாளிலும், எங்கள் இல்லத்திற்கு ஸப்தகிரி இதழ் வந்தது. இதனாலேயே எங்கள் புதிய இல்லத்திற்கு ஸப்தகிரி என்றே பெயர் சூட்டினோம். புதுமனை புகுவிழா அன்றும் திருவேங்கடமுடையான் மறக்காமல் எங்கள் இல்லத்திற்கு ஸப்தகிரி இதழை அனுப்பி ஆசிர்வதித்தார். எனது பெண் வழிப் பேரன் மற்றும் பிள்ளை வழிப் பேத்தி பிறந்த அன்று எங்கள் இல்லத்திற்கு தவறாமல் ஸப்தகிரி இதழ் வந்தது.

என் மனைவி கடந்த ஆண்டு சிறிது உடல் நலம் குன்றி இருந்தார். செப்டம்பர் 12 ஆம் தேதி ஸப்தகிரி இதழ் வந்தது. எனது மனைவி உறங்குவதற்கு முன் ஸப்தகிரி இதழைப் படித்து விட்டு உறங்கினார். அன்றிரவு உறக்கத்திலேயே எந்தச் சிரமும் இன்றி அவரது உயிர் பிரிந்தது. எங்களது ஈடு செய்ய முடியாத இழப்பிலும் திருவேங்கடவனின் அருள் எனது மனைவிக்குக் கிடைத்ததை எண்ணி நாங்கள் சற்று ஆறுதல் கொண்டோம்.

ஒவ்வொரு வருடமும் நான் பிறந்த தேதி அன்று அல்லது நான் பிறந்த நட்சத்திர நாளன்று தவறாமல் ஸப்தகிரி இதழ் வரும். இந்த வருடம் பிப்ரவரி மாதத்துடன் எனது ஸப்தகிரியின் ஆயுள் சந்தா நிறைவு பெற்று விட்டது. அதனால் மார்ச் மாதத்தில் இருந்து ஸப்தகிரி இதழ் வருவது நின்று விட்டது. மே மாதம் மூன்றாம் தேதி எனது 74வது பிறந்தநாள். காலை எட்டு மணிக்கு சென்னையில் இருக்கும் எனக்கு பெங்களூரில் இருக்கும் எனது மைத்துனர் இணையதளம் வழியாக ஸப்தகிரியின் பிரதியினை எனக்கு அனுப்பி வைத்தார். அன்று என் பிறந்தநாள் என்பதோ எனது சந்தா முடிந்த விவரமோ அவருக்குத் தெரியாது. கைபேசியில் எனது மைத்துனர் மூலம் எனக்குப் பிறந்த நாள் ஆசிகளை வழங்கியது திருவேங்கடவனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்.

## “ஸப்தகிரி” மாத இதழின் வாயிலாக திருவேங்கடவனின் திருவருள்

திரு. எம்.எஸ். ராகவன்,
திருவல்லிக்கேணி,
94423 62861



# நவராத்திரியில் நற்தரிசனம்

-திருமதி எஸ்.திருவேணி, நங்கைநல்லூர்.

புரட்டாசி மாதம் அமாவாசைக்கு மறுநாள் சுக்ல பக்ஷ பிரதமை அன்று தொடங்கி நவமி வரை 9 நாட்கள் கொண்டாடப்படும் பண்டிகையே நவராத்திரி ஆகும். இறுதியாக தசமி அன்று விஜயதசமியாக வெற்றி விழா கொண்டாடுவர்.

நவராத்திரி நோன்பு என்றாலே ஆலயங்கள், வீடுகள் என எல்லா இடங்களும் மங்கலகரமாக அலங்கரிக்கப்பட்டு இறை வழிபாடுகள் நடைபெற்ற வண்ணம் இருக்கும். பொம்மைகளை படிப்படியாக வரிசையாக அடுக்கி வைப்பர். இது வழக்கம் உள்ள இல்லங்களிலும், ஆலயங்களிலும் செய்வர். பிரதமை நாளில் கும்பம் வடிவில் கலச ஸ்தாபனம் செய்து, அதில் தாயாரை அனுசந்தானம் செய்து அதற்கு மலர்மாலைகள், ஆபரணங்கள் என 16 வகையான உபசாரங்கள் செய்து பூஜைகள் செய்வர்.

நவராத்திரி ஒன்பது நாட்களும் காலை வேளைகளில் இனிப்புப் பண்டங் களையும், மாலை வேளைகளில் சுண்டல் போன்றவற்றையும் தேவிக்கு நிவேதனம் செய்வர். இந்நாட்களில் மாலை வேளையில் மஞ்சள், குங்குமம், மலர்கள், வளையல், கண்மை, சீப்பு, கண்ணாடி, இரவிக்கைத் துண்டு (முடிந்தால் ), புடவை போன்றவற்றை சுமங்கலிப் பெண்களுக்கு கொடுத்து அவர்களிடம் ஆசிர்வாதம் பெற்றுக் கொள்வர்.

## குமாரி பூஜை

சிறு பெண் குழந்தைகளுக்கு செய்யப்படும் பூஜையாகும். இரண்டு வயது முதல் ஒன்பது வயது நிறைந்த பெண் குழந்தையை அழைத்து மஞ்சள், குங்குமம், சீப்பு, வளையல், கண்ணாடி, கண்மை, மலர்கள், ஆடை என கொடுத்து, அக்குழந்தைக்கு விருந்தோம்பல் செய்வர்.



இந்த நவராத்திரி நாட்களில் பஜனைகள் நடத்தப்படும். கச்சேரிகளும், நடன நிகழ்ச்சிகளும் நடைபெறும். இல்லங்களுக்கு வரும் பெண்கள் தாம் அறிந்த பாடல்களை தேவிக்காகப் பாடி இன்புறு வர். எல்லோரும் ஒன்று கூடி சந்தோஷமாக நடத்தும் பண்டிகையே நவராத்திரி பண்டிகையாகும்.

## ஆலயங்களில் நவராத்திரி

சக்தி கோயில்களான மதுரை ஸ்ரீமீனாட்சியம்மன் கோயில், காஞ்சி ஸ்ரீகாமாக்ஷியம்மன் கோயில், ஸ்ரீகாளஹஸ்தியில் ஸ்ரீஞானபிரசுன்னா அம்பிகை சன்னதியின் எதிரிலும் பலவிதமான பொம்மைகளை வரிசை வரிசையாக அடுக்கி வைத்து, அந்த அம்பிகையை அங்குக் கலசத்தில் ஆவாஹணம் செய்து பூஜைகளை நடத்துவர்.

ஆலய மூலவருக்கு ஒவ்வொரு நாள் ஒவ்வொரு அலங்காரங்களும் செய்வர். இந்த அலங்காரங்களில் அம்பிகையைத் துதிக்க அனைத்து இடங்களிலிருந்தும் பக்தர்கள் மாலை நேரத்தில் ஆலயத்திற்கு வந்து தேவியின் நல்லாசிகளைப் பெறுவர்.

## திருச்சானூரில் நவராத்திரி

திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதி தாயார் சன்னதியில் நவராத்திரி முதல் நாள் கலச ஸ்தாபனம் செய்து ஒன்பது நாட்களும் பூஜைகள் சிறப்பான முறையில் நடத்துவர். விஜய தசமியன்று தாயார் யானை வாகனத்தில் எழுந்தருள்வார்.

## திருமலையில் நவராத்திரி

திருமலையில் நவராத்திரி என்பது பிரம்மோத்ஸவமாகக் கொண்டாடப்படுகிறது. நவராத்திரி ஒன்பது நாட்களிலும் திருமலையப்ப ஸ்வாமி பலவித வாகன சேவைகளில் தனித்தும், உபயநாச்சிமார்களுடனும் வந்து பக்தர்களுக்கு அருள் புரிவார். நவராத்திரியின் வெற்றி நாளான விஜய தசமி அன்று சக்கர ஸ்நானம் நடைபெறும். எம்பெருமானும் பக்தர்களின் கண்களுக்கு விருந்தளிப்பார்.

## ஆதிசேஷன்

காலையில் துவஜாரோஹணம் நடைபெற்ற பிறகு இரவு சேஷாத்ரி மலையில் கொலுவீற்றிருக்கும் திருமலையப்ப ஸ்வாமிக்கு ஏழு தலை கொண்ட பெரிய சேஷ வாகனமும், மறுநாள் காலை ஐந்து தலை கொண்ட சிறிய சேஷ வாகன சேவையும் நடைபெறும். ஸ்ரீநிவாசனுக்கு நிலையம், படுக்கை, ஆசனம், பாதுகை, உத்தரீயம், தலையனை, குடை, பாதபீடம், சேவகன் அனைத்தும் ஆதிசேஷனே ஆவார். ஆதலால் வாகன சேவையில் முதலிடம் ஆதிசேஷனுக்கு.

## அன்னப் பறவை

பிரம்மோத்ஸவத்தின் இரண்டாவது நாள் இரவு ஸ்வாமி சர்வ வித்யாதாரிணியான சரஸ்வதி அலங்காரத்தில் ஹம்ஸ வாகனத்தில் எழுந்தருள்வார்.

## சிம்மம்

பிரம்மோத்ஸவத்தின் மூன்றாம் நாள் காலை திருமலையப்ப ஸ்வாமி சிம்ம வாகனத்தில் பக்தர்களுக்கு காட்சியளிப்பார். மிருக ராஜனான சிம்மம் போன்றவர் திருமலையப்ப ஸ்வாமி. விலங்கைப் போன்று மனத் தத்துவத்தை உடைய மாந்தர்கள் தம்மை நல்வழியில் மாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் கருத்தை உணர்த்தும் விதத்தில் இந்த வாகனம் அமைந்துள்ளது.



**முத்துப்பந்தல்**

பிரம்மோத்ஸவத்தின் மூன்றாம் நாள் இரவு நவரத்தினங்களில் ஒன்றான சந்திரனுக்கு இணை யான முத்தினாலான பந்தல் வாகனத்தில் ஸ்ரீதேவி பூதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி திருமாடவீதி களில் உலா வந்து பக்தர்களுக்குக் காட்சி தருகிறார்.

**கற்பகமரம்**

பிரம்மோத்ஸவத்தின் நான்காவது நாள் காலை ஸ்ரீதேவி பூதேவியருடன் ஸ்வாமி கல்ப விருக்ஷ வாகனத்தில் எழுந்தருளுவார். கல்ப விருக்ஷமோ கேட்பதை கொடுக்க வல்லது. திருவேங்கடவனோ நாம் கேட்காததையும் அளிக்க வல்லவன்.

**சர்வபூபாலர்கள்**

பிரம்மோத்ஸவத்தின் நான்காம் நாள் இரவு ஸ்ரீதேவி பூதேவியரு டன் திருமலையப்பன், பூமண்ட லத்தில் உள்ள அரசர்கள் அனைவரும் வாகனமாக பங்கேற்கும் சர்வ பூபால வாகனத்தில் உலா வருகிறார். இது ஓர் தங்க மண்டபம்.

**மோகினி**

பிரம்மோத்ஸவத்தின் ஐந்தாம் நாள் காலை ஸ்வாமி மோகினி அலங்காரத்தில் ஜகன் மோகினியாக பக்தர்களுக்கு ஆண், பெண் பேதமின்றி அனைவரையும் தான் காப்பதை தெளிவாகத் தெரிவிக்கும் விதத்தில் காட்சி தருகிறார்.

**கருடன்**

பிரம்மோத்ஸவத்தின் ஐந்தாம் நாள் பெரிய திருவடி என்று சிறப்பைப் பெற்ற கருடன் மீது ஏறி திருமலையப்ப ஸ்வாமி காட்சியளிக்கும் கருடோத் ஸவம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இன்று மூல மூர்த்திக்கு அலங்கரிக்கப்படும் மகர கண்டீ, லக்ஷ்மி ஹாரம், வேங்கடேச சஹஸ்ர நாம மாலை போன்ற ஆபரணங்களை திருமலையப்ப ஸ்வாமி சூடிக் கொண்டு ஆயிரம் சூரியனுக்கு நிகரான ஒளியில் பக்தர்களுக்கு தரிசனமளிக்கிறார்.

**ஆஞ்சநேயன்**

பிரம்மோத்வத்தின் ஆறாம் நாள் காலை ஸ்வாமி தனித்து, விஷ்ணுவின் சிறிய திருவடி என்று போற்றப்படும் அனுமன் மீது ஏறி ஸ்ரீவேங்கட ராமனாக பக்தர்களுக்கு தரிசனமளிக்கின்றார்.

**யானை**

பிரம்மோத்ஸவத்தின் ஆறாம் நாள் இரவு கஜேந்திர மோட்சத்தில் யானையைக் காப்பாற்றியது போல் தன்னைச் சரணடைந்த பக்தர்களுக்கு அருள் புரிவோம் என்று கூறும் வண்ணம் திருமலையப்ப ஸ்வாமி தரிசனமளிக்கிறார்.

**சூரியப்பிரபை**

சூரியன் இல்லையெனில் எவ்வித படைப்பும் இராது. ஸ்ரீமந்நாராயணனின் பிரதி வடிவமே சூரிய நாராயணன். சூரியப்பிரபை வாகனத்தில் ஸ்வாமி எழுந்தருளி, ஸ்வாமி இல்லையெனில் எதுவும் நடக் காது என்பதை உணர்த்தும் விதமாக அமைகிறார்.

**சந்திரப் பிரபை**

பிரம்மோத்ஸவத்தின் ஏழாம் நாள் இரவு குளிர்ச் சியைத் தரக்கூடிய சந்திரப்பிரபை வாகனத்தில் ஸ்வாமி எழுந்தருளி, பகவத் கீதையில் "நட்சத்திரத் தின் நடுவே சந்திரன் நானே" என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறிய விதத்தில் தரிசனம் அளிக்கிறார்.

**தங்கத்திருத்தேர்**

தங்கத்திருத்தேரில் உபயதேவியருடன் ஸ்வாமி யும் எழுந்தருளி சூரிய கிரணங்களின் நடுவே திருமாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்குத் தரிசனம் தருகிறார். இதனை "ஸ்வர்ண ரதரங்க டோலோத்ஸவம்" எனவும் அழைப்பர்.

**குதிரை**

பிரம்மோத்ஸவத்தின் எட்டாம் நாள் இரவு குதிரை வாகனத்தில் ஸ்வாமி ஊர்வலம் வருகிறார். ஸ்ரீநிவாசன் குதிரை வாகனத்தில் வருகை புரிந்து துஷ்ட சிக்ஷணம், சிஷ்டரக்ஷணம் செய்வார் என்பதே இந்த வாகன சேவை குறிப்பிடுகிறது.

**சக்ரதாரி - சக்கரத்தாழ்வார்**

பிரம்மோத்ஸவத்தில் வாகன சேவைகளில் அயர்வுற்ற திருமலையப்ப ஸ்வாமிக்கு சக்ர ஸ்நானம், வராக ஸ்வாமி ஆலய வளாகத்தில் உபய தேவிகளுடன் அபிஷேகம் நிகழ்த்திய பின் சக்கரத்தாழ்வாரை வராக ஸ்வாமி புஷ்கரணி யில் அதாவது சக்ர ஸ்நானம் செய்விப்பதுடன் இந்த பிரம்மோத்ஸவம் இனிதே நிறைவு பெறுகிறது.



# வரகூர் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் கோயில்

– திரு. எம். அசோக்ராஜா,
திருச்சி, 9750333265.

திருவையாறுக்கு அருகில் கண்டியூரில் இருந்து திருக்காட்டுப் பள்ளிக்குச் செல்லும் சாலையில் இருந்து 7 கி.மீ. தொலைவு பயணித்தால், வரகூர் எனும் கிராமத்தில் எழுந்தருளி இருக்கும் வேங்கடேசப் பெருமாள் கோயிலை அடையலாம்.

ஒரு காலத்தில் பூபதிராஜபுரம் என்று அழைக்கப் பட்டது. பின்னர் வரகூர் என்றானது. அதாவது நாராயண தீர்த்தர் எனும் அடியவர், பல திருத் தலங்களுக்குச் சென்று தரிசித்து வந்தார். அப்போது இந்த ஊருக்கு வரும்போது அவருக்கு வழி தெரிய வில்லை.

அந்த சமயத்தில் பெருமாள், வெண் பன்றியாக வந்து வழிகாட்டியதுடன் தன்னுடைய திருக் கோலத்தையும் காட்டியருளினார். வராகம் என்றால் பன்றி, இதையடுத்து இந்த ஊர் வராக புரி என்று அழைக்கப்பட்டு பின்னர் வரகூர் என மருவியதாகச் சொல்கிறது தல புராணம்.

ஆந்திர மாநிலத்தில் பிறந்தவர் நாராயண தீர்த்தர். இசையில் பாண்டித்யம் பெற்றிருந்தார். அதே போல், நாட்டியத்தையும் அறிந்தவராக இருந்தார். ஸ்ரீமத்பாகவதத்தை எல்லோருக்கும் போதித்து வந்தார். இல்லறத்தை விட்டார். துறவறம் மேற் கொண்டார். ஒரு முறை நாராயண தீர்த்தருக்கு தீராத வயிற்றுவலி வந்தது. திருப்பதி ஏழுமலையானை தரிசிக்கச் சென்றார். "திருவையாறுக்கு அருகில் அமைந்துள்ள பூபதிராஜ புரத்துக்குச் செல்வாயாக! உன் வயிற்று வலி தீரும்" என அசரீரி ஒலிக் கேட்டது.

இதன் பின்னர், நடுகாவிரி எனும் பகுதியை அடைந்தார். இனி எந்தப் பக்கம் செல்வது, எப்படிச் செல்வது என்று தெரியவில்லை. அவரும் கொஞ்சம் ஓய்வெடுக்கலாம் என அங்கே மரத்தடியில் இளைப்பாறினார்.

சிறிது நேர இளைப்பாறலுக்குப் பின்னர், "விடியும்போது வெண்பன்றி ஒன்று உனக்கு முன்னே வரும். அது வழிகாட்டும்" என அசரீரி ஒலிக் கேட்டது. அதன்படி மறுநாள் விடிந்தது. வெண்பன்றி வந்தது. அந்தப் பன்றியைப் பின் தொடர்ந்து பயணித்தார் நாராயண தீர்த்தர்.

ஒவ்வொரு கிராமமாகக் கடந்து வந்து, ஓரிடத்தில் பெருமாள் கோயிலுக்குள் சென்றது. அவரும் சென்றார். அங்கே அந்த வெண்பன்றி, சந்நிதிக்குள் சென்று மறைந்தது. அங்கே பெருமாள் தன் திருக்கோலத்தைக் காட்டியருளினார். நாராயண தீர்த்தரின் வயிற்று வலி காணாமல் போனது.

சிலிர்த்துப் போன நாராயண தீர்த்தர் அங்கேயே, அந்தத் தலத்திலேயே தங்கினார். கிருஷ்ண பகவானின் லீலைகளை விவரிக்கும் வகையிலான "ஸ்ரீகிருஷ்ண லீலா தரங்கிணி" எனும் இசையும்

நாட்டியமும் கலந்த நாடகத்தை அரங்கேற்றினார். வரகூர் எனும் அற்புதமான திருத்தலத்தில், கிருஷ்ண ஜயந்தியின் போது, இன்றைக்கும் கோலாகலமாக உறியடி உத்ஸவம் நடைபெறுகிறது. அப்போது பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். ஒவ்வொரு நாளும் பெருமாள் ஒவ்வொரு விதமான திருக்கோலத்தில் காட்சி தருவார்.

உறியடி உத்ஸவத் திருநாளன்று, வெண்ணெய்த் தாழிக் கோலத்தில் பெருமாள் பவனி வருவார். அருகில் உள்ள கடுங்கலாற்றங்கரையில் எழுந்து அருளுவார். மூலவரின் திருநாமம் ஸ்ரீலக்ஷ்மி நாராயண பெருமாள். அப்படி உறியடிக் கண்ணனாக பெருமாள் வீதியுலா வரும் வேளையில், நூற்றுக் கணக்கான பக்தர்கள் அங்கப்பிரதக்ஷிணம் செய்து கொண்டே கோயிலை அடைவார்கள்.

சுற்றுவட்டார கிராம மக்களும் தஞ்சை, திருவையாறு, கண்டியூர் முதலான ஊர்களைச் சேர்ந்த மக்களும் வந்து விழாவில் கலந்து கொண்டு தரிசித்துச் செல்வார்கள். தீராத வியாதியால் அவதிப்படுவோர், எவ்வளவு மருந்து சாப்பிட்டும் குணமாகவில்லையே என்று வருந்துவோர், வரகூர் பெருமாளை வந்து தரிசித்துச் சென்றால், விரைவில் குணமாகி விடுவார்கள். கல்யாணக் கவலையால் கண்ணீர் விடுபவர்களுக்கு விரைவிலேயே திருமண பாக்கியத்தைத் தந்தருள்வார் வரகூர் பெருமாள்.

இங்கே, பெருமாள் சந்நிதியில் வெள்ளிக்காப்பு வைத்து பிரார்த்தனை செய்து கொண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது ஐதீகம். திருச்சி கல்லணை வழியாகவும் வரகூர் திருத்தலத்தை அடையலாம்.





## நவம்பர் மாத பண்டிகைகளும் உற்சவங்களும்

**08–11** ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
**09–18** திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்
**12** நரக சதுர்தசி, திருமலையில் தீபாவளி ஆஸ்தானம்
**14** திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் யானை வாகனம்
**16** மணவாள மாமுனிகள் சாத்துமுறை
**17** நாகுல சதுர்த்தி
**18** திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம்
**19** திருமலையில் திருமலையப்ப ஸ்வாமி மற்றும் திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்பயாக மஹோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் கந்த சஷ்டி
**22–26** நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம்
**24** கைசிக துவாதசி
**26** கார்த்திகை தீபோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் கார்த்திகை தீபோத்ஸவம்
**27** திருமங்கையாழ்வார் சாத்துமுறை, 28 திருப்பாணாழ்வார் சாத்து முறை
**30** திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் லக்ஷ வில்வார்ச்சனை


# திருமலை தெய்வமும் தியாகராஜ சுவாமியும்

இசைப் பிரியர்கள் மட்டுமின்றி, சாதாரண மக்களிடையே கூட தியாகராஜ சுவாமிகளின் பெயரை அறியாதவர்கள் உண்டா? அவருடைய பாட்டுகளை கேளாதோர்கள்தான் உண்டா? அவர் ஒரு சந்யாசியைப் போலவே வாழ்ந்து, தன்னுடைய இஷ்ட தெய்வமான இராமனை வணங்கி, இராமன் மேல் நூற்றுக்கணக்கானப் பாடல்களை இயற்றி உள்ளார். அவர் பிறந்து வளர்ந்தது காவிரியின் டெல்டா பகுதியான திருவையாறு.

தியாகராஜரை நாம் சத்குரு என்றே அழைக்கிறோம். ஏனெனில் அவர் வாழ்வின் கடைசியில் ஆபத் சந்யாசம் மேற்கொண்டாலும், சின்ன வயதில் இருந்தே அவர் வாழ்ந்த வாழ்க்கை சந்நியாசி போன்ற வாழ்க்கை தான். எளிமை, பக்தி, நாம சங்கீர்த்தனம் இவை தான் அவர் வாழ்க்கை. தவிர தினமும் காலையில் உஞ்சவ்ருத்திக்கு போவார். அதில் வரும் அரிசி தான் அன்றாடம் உணவுக்கு. அவரை அரசர்கள் கூப்பிடாமல் இல்லை. தஞ்சையில் இருந்து மாத்திரம் அல்லாமல், திருவனந்தபுரத்து அரசர் கூட அவரை கூப்பிட்டார். ஆனால் அவர் "நிதி சால சுகமா", "பதவிநிஸத்பக்தி" என்றெல்லாம் பாடி அதெல்லாம் வேண்டாம். எனக்கு "இராம பக்தி சாம்ராஜ்யம் போதும்" என்று சொல்லி விட்டார். அவர் நிறைய பாடினது இராமரைப் பற்றி தான். தியாகராஜர் அதிகமாக எங்கேயும் வெளியூர்களுக்கு சென்றதில்லை. ஆனாலும் அவர் சென்ற சில ஊர்களில் தெய்வங்கள் மேல் பாடியுள்ளார். திருப்பதிக்கு அவர் சென்றபோது அங்கு இரண்டு பாடல்கள் பாடி உள்ளார். அவை "வெங்கடேசா நின்னு", "தெர தீயக ராதா" ஆகியவையாகும்.

முதலில் தியாகராஜ சுவாமி மத்தியமாவதியில் இயற்றிய ***"வெங்கடேச நின்னு சேவிம்பனு பதிவேயி கன்னுலு காவலேனையா"*** என்ற பாட்டை பார்ப்போம். தெலுங்கு தெரிந்தவர்களுக்கு சாதாரணமாக புரியக்கூடிய பாட்டு தான் இது. வேங்கடேஸ்வர ஸ்வாமியே உன்னை பார்ப்பதற்கு 10,000 கண்கள் வேண்டுமே என்று பரவசப்படுகிறார். ***"பஸ்ஸோ மேரே நைநனுமே"*** என்ற மீராபாயின் பஜனை கேட்டு இருக்கிறோம் அல்லவா? அதேபோல், சேவித்தோமே அந்த ஸ்வாமி பதினாயிரம் கண் கொண்டு பார்த்தால் தான் நம்முடைய கண்களை நிரப்பி உள்ளத்திலேயே இருப்பார் என்று தியாகராஜருக்கு தோன்றியிருக்க வேண்டும்.

அனுபல்லவியில் "பங்கஜாக்ஷ" என்று கூப்பிடுகிறார். அக்ஷ என்றால் கண் என்பது எல்லோருக்கும் தெரியும். தாமரை போன்ற கண்களை உடையவனே! முனிகளை எல்லாம் காப்பவன் நீதான்! மிக அழகான மங்கலகரமான திவ்ய வடிவுடன் விளங்குகின்றாயே



–திருமதி மைதிலி சம்பத்,
செகந்திராபாத்.









என்கிறார். அடுத்து சரணத்தில் பார்த்தால் முதல் வரியில், மேலானவன் நீயே என்று திக்குகள் அனைத்தும் புகழ நான் அன்பினால் மெய் மறந்து சாச்வதனாகிய உன்னை தரிசிக்க வந்துள்ளேன். ஒளி வீசும் உன் நல்லழகுடன் வந்து காப்பாயாக. அடுத்ததாக என்று செய்த நோன்பின் பலனோ தெரியாது. நாமாமிருத பழம் அது. நாமம் என்னும் அமிர்தத்தின் பலன் அது. திருநாமமாகிய அமுத பானம் என்ற படிக்கட்டு எனக்கு கிடைத்தது. லட்சுமிபதி பரமானந்த ஒளி வீசும் உன் அழகுடன் விரைந்து வந்து காப்பாயாக. பிரகாசமான உன் திருவடிகளுக்கிணை எங்கும் காண இயலாது.

யோகிகளின் இதயத்தில் நீதான் உறைகிறாய். நீயே கதி என்று கூறும் மக்களுக்கு நீ தான் பேரதிர்ஷ்டம். பாகவதப் பிரியனே! சலம் என்றால் மலை அல்லவா? அம்மலையின் மேல் மிக அழகாக ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டு இருக்கும் வேங்கடேசா! எத்தனை அழகாக ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டு இருக்கும் வேங்கடேசா! என்று எத்தனை ஆழமாக அனுபவித்து இருக்கிறார்.

அடுத்து நாம் பார்க்கப் போவது தெரதீயகராதா என்ற கௌளி பந்து ராகப்பாடல். அந்த ராகமே ஒரு கெஞ்சல் ரஸம் நிரம்பிய ராகம். தயவு செய்வாயா என்று மிகவும் பணிவுடன் கேட்கக்கூடிய பாவம் அந்த ராகத்திலேயே இருக்கிறது. மேலெழுந்த வாரியாக பார்க்கும்போது இந்த பாட்டுக்கு எப்படி பொருள் சொல்வார்கள் என்றால், தியாகராஜ ஸ்வாமி மலையப்ப ஸ்வாமியின் முன்னே நிற்கும் பொழுது திரை போட்டிருந்தார்களாம். தியாகராஜர் மிகவும் வருத்தமுற்று திரையைத் திறக்கக்கூடாதா என்று கெஞ்சி பாடுகிறார். திரை திறக்கிறது. தியாகராஜர் தரிசனமும் செய்கிறார். அதன் உள் அர்த்தத்தை பார்க்கலாம். என்னுள் இருக்கும் பொறாமை அகல வேண்டும் என்று கேட்கிறார். மேன்மக்கள் எப்பொழுதுமே தங்களை மேன்மக்கள் என்று சொல்லிக் கொண்டு திரிவதில்லை.





**திருமலையில் தலைமுடிகாணிக்கை**

**மனிதனின் பாபங்கள், தோஷங்கள் மற்றும் அகங்காரம் போன்றவையெல்லாம் தலையில் தான் சேரும் என்பார்கள். இவையெல்லாம் நம்மிடமிருந்து தொலைய வேண்டுமானால் திருவேங்கடவனுக்கு முடிகாணிக்கை செலுத்துவது ஒன்றே வழி. பழைய அன்னதானம் கட்டிடம் எதிரிலுள்ள 5 மாடி கல்யாண கட்டா, ராம்பகிசா தங்கும் விடுதி பின்புறம் நந்தகம் விடுதி போன்ற இடங்களில் முடி காணிக்கை செலுத்தலாம். பெண்கள், பெரியோர்கள், சிறார்கள் எல்லோரும் முடி காணிக்கை செலுத்தி "கோவிந்தா" என்ற திருநாமத்தை சொல்லி திருமலையப்பனின் திருவடியைச் சேவிக்கிறார்கள்.**

அவர்கள் தங்களை அதுவும் ஸ்வாமி முன்னால் நிற்கும்போது தங்களை எவ்வளவு தாழ்த்தி சொல்ல முடியுமோ அவ்வளவு தாழ்த்திக் கொள்வது தான் வழக்கம். அந்த சஜ்ஜனர்கள் வரிசையில் இருக்கும் தியாகராஜர் திரையைத் திறக்கக் கூடாதா? திருப்பதி வேங்கடரமணா, என் மனதில் இருக்கும் மதமாச்சர்யம் பொறாமை போன்ற தீய குணங்களை வெறுத்து விலக்கலாகாதா என்கிறார். அவரிடம் தீய குணங்கள் இருக்கக்கூடுமா? இருக்காது. ஆனாலும் அவர் இன்னும் இன்னும் உயர்ந்த நிலையை அடைவதற்காகப் பேசுகிறார். இறைவனிடம் வேண்டுகிறார். புருஷார்த்தங்களை என்னிடம் அணுக முடியாமல் விரட்டுவது இந்த பொறாமை என்னும் தீ தான் என்கிறார்.

நமக்குத் தெரிந்த தியாகராஜர் வரலாறு எத்தனை முறை படித்தாலும் அவர் எதற்காகவும் எங்கும் பொறாமைப்பட்டார் என்றோ, ஏதோ நிதியை வேண்டி பேராசைப்பட்டார் என்றோ, எவரையும் கடிந்தார் என்றோ நாம் பார்த்ததே இல்லை. ஆனாலும் அவர் தன்னை அப்படி தாழ்த்திக் கொள்கிறார். நான் உன்னை சேவிப்பதன் பலனாக என்னிடம் இருக்கும் பொறாமை போன்ற தீய குணங்களை விலக்கிவிட்டு தர்மம், அர்த்தம் முதலான நான்கு வகை புருஷார்த்தங்களை எனக்கு தரக்கூடாதா என்று கேட்கிறார். ஏனென்றால் அவை என்னிடம் அணுக ஒட்டாமல் விரட்டி அடிப்பது இந்த பொறாமை என்னும் திரை தான். அவர் அதற்கு எத்தனை விதமான உபமானங்கள் சொல்கிறார் பாருங்கள். சித்தமாக உணவருந்தும் சமயம் அன்னத்தில் ஈ விழுந்தது போலும், ஹரிதியானம் செய்யும் பொழுது மனம், தாழ்வு நிலையை நாடுவது போலவும், மீன்கள் பசியில் ஏதோ உணவு இருக்கிறது என்று நினைத்து வலையில் அகப்பட்டுக் கொள்வது போலவும், ஒளி வீசும் விளக்குக்கு எதிரில் மறைவை அமைத்து இருட்டாக்குவது போலவும், விலங்குகள் வலை என்று தெரியாமல் தானே அகப்பட்டுக் கொள்வது போலவும் இப்படி எல்லாம் இந்தப் பொறாமை திரை மறைக்கிறது. இந்த தியாகராஜனிடம் மதமாகிய தீமை வராமல் திரையை நீ விலக்கி அருளக்கூடாதா? இவைதான் தெரதீயகராதா என்பதன் உள் அர்த்தம்.

எத்தகைய பெரிய அர்த்தத்தை எவ்வளவு அழகாக பாட்டில் அமைத்திருக்கிறார்? யார் வேண்டுமானாலும் பாடலாம் அப்படி பாடும்போது அவரவர் மனதில் இருக்கும் பேராசைகள் சென்றால்தான் மோட்சம் என்பது கைகூடும். அதை அவர் நேரடியாக திருப்பதி வேங்கடரமணரிடம் பிரார்த்திக்கிறார்.

தன்னை உணர்ந்து, இறைவனையும் உணர்ந்து அவனைக் காண பத்தாயிரம் கண் வேண்டும் என்று கேட்கும் இந்த பக்திக்கு ஈடேது. இணை தான் ஏது!



# அக்டோபர் 2023
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

### மேஷம்

தொழில் துறை போட்டியில் வளர்ச்சி உண்டு. யாத்திரையால் தரிசன பாக்கியம் கிட்டும். குடும்பத்தினர் ஆரோக்யம் மேம்படும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். பணப்புழக்கம் உண்டு. மாணவர் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மேலதிகாரிகளின் அன்பும் ஆதரவும், பதவி உயர்வும் கிட்டும். கடன் வாங்கி சுபச் செலவுகள் செய்வீர். கடன் சுமைகள் தீரும். நல்ல யோகமான மாதமிது.

### ரிஷபம்

தொழில் துறையில் அலைச்சலும், அதற்கேற்ற வருமானமும் இருக்கும். வீடு, மனை, வாகன யோகம் உண்டு. ஆரோக்யத்தில் அக்கறை தேவை. பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் விஸ்தரிப்பு செய்யலாம். தாய், தந்தையரின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. மருத்துவ உதவியால் குழந்தை பாக்கியம் கிட்டும். நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

### மிதுனம்

தொழில் துறையில் லாபம் கிட்டும். விவேகத்துடன் காரியத்தைச் சாதிப்பீர். வியாபாரிகளுக்கு நல்ல வருமானம் உண்டு. பெற்றோர் ஆரோக்யத்தில் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். உறவினர்கள், நண்பர்களால் பிரச்சனைகள் ஏற்படும். திருமணம் கைகூடும். பெண்களால் தனலாபம் உண்டு. சொத்துக்களில் வில்லங்கம் தீரும். நல்ல யோகமான மாதம்.

### கடகம்

தொழில் துறையில் வளர்ச்சியும் இடமாற்றமும் உண்டாகும். முயற்சி திருவினையாக்கும். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். மனைவியின் ஆரோக்யம் பாதிக்கும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். மாணவர்கள் முயன்றால் மதிப்பெண்கள் பெற இயலும். வாக்குவாதம் செய்ய வேண்டாம். உதவிகள் கிட்டும். ஆரோக்யத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

### சிம்மம்

கணவன்-மனைவிக்குள் கருத்து வேற்றுமைகள் உண்டாகும். வீடு, மனை, வாகன யோகம் உண்டு. பெற்றோர் ஆரோக்யம் நன்றாக இருக்கும். திருமண யோகம் கிட்டும். தொழில் துறை விருத்தி செய்வீர். கூட்டு வியாபாரம் நல்ல மேன்மையை உண்டாக்கும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். பலவிதத்திலும் நன்மைகளைப் பெறுகின்ற யோகமான மாதமிது.

### கன்னி

ஆரோக்யத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. அஜீரணம் ஏற்படுத்தக் கூடிய உணவுகளை தவிர்ப்பது நல்லது. குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதம் தவிர்க்கலாம். செலவினங்களுக்கு ஏற்ப வருமானம் கிடைக்கும். வெளிநாடு செல்லும் யோகமும் உண்டு. குழந்தைகளின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் ஊக்கத்துடன் படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

### துலாம்

தொழில் துறையில் புதிய முயற்சிகளால் வெற்றி பெற முடியும். மனைவியின் ஆரோக்கியத்திற்கு செலவினங்கள் அதிகமாகும். உங்கள் தோஷ நிவர்த்திக்கு இம்மாதம் பரிகாரங்கள் செய்யலாம். திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கை கூடும். மொத்தத்தில் எதிர்பார்த்த நல்ல பலனும் லாபமும் கிடைக்கும் மாதமிது.

### விருச்சிகம்

கடன் வாங்கி சுபச்செலவுகளைச் செய்வீர்கள். ஆரோக்யத்திற்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். தாயின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. லாப நோக்கத்துடன் செயல்பட்டு துறையில் நல்ல வெற்றியைப் பெறுவீர்கள். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. புதிய முயற்சிகளால் வெற்றியைப் பெறும் மாதமிது.

### தனுசு

தொழில் துறையில் நல்ல வளர்ச்சியும், பண வரவும் உண்டு. சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். தாய்-தந்தையர்-சகோதரர் ஆதரவும் உண்டு. திருமணமாகாதவர்களுக்கும் இம்மாதம் திருமணம் முடிவாக வாய்ப்பு உண்டு. குழந்தை பாக்கியமும் உண்டு. சகல துறைகளிலும் வெற்றிக் கொடியை நாட்டுவீர்கள். பலவிதத்திலும் நன்மை தரும் யோகமான மாதமிது.

### மகரம்

தொழில் துறையில் வேலைப் பளு அதிகமாகும். சிலருக்கு இடமாற்றம் விரும்பியபடி கிடைக்கும். வேலை வாய்ப்பு கிடைக்கும். கணவன் மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். பணப் புழக்கம் உண்டாகும். புதிய வாகனம், வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. தந்தையின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. நல்லதொரு திருப்பத்தை ஏற்படுத்தும் மாதமிது.

### கும்பம்

ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. இரவு நேரம் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். தொழில் துறைக்காகக் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் வேறு வேலை கிடைக்கும் வரை இருக்கும் வேலையை விடக்கூடாது. மொத்தத்தில், கடும் முயற்சியின் மூலம் வெற்றி பெறும் மாதமிது.

### மீனம்

செலவுகளுக்கு ஏற்ற வருமானம் உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். தொழிலில் பணப்புழக்கம் உண்டு. புது முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். திருமணம் கைகூடும். மருத்துவ உதவியுடன் குழந்தை பாக்கியம் கிடைக்கும். நல்ல யோகமும் முன்னேற்றமும் தருகின்ற மாதமிது.

# சந்தேகம் தெளிவோம்



**கே: திருவேங்கடமலையை வேத வெற்பு என யார் குறிப்பிட்டார்? ஏன்?**

ப : ஸ்ரீவேதாந்த தேசிகன் எனும் ஆசார்யர் “வேங்கட வெற்பு என விளங்கும் வேத வெற்பே” என்று குறிப்பிட்டு அருளினார்.

திருவேங்கட மலையின் பெருமையை வேதமே சொல்கிறது; ரிக் வேதத்தில் தெளிவான திருமலை எனப் புகழப்படும் மலை என்னும் பெருமை இருப்பதால், வேதவெற்பு என்று சாதிக்கிறார்.

மேலும், வேதம் எப்படிப் பெருமானை நமக்கு உணர்த்துகிறதோ, அதேபோல, திருமலையானது பெருமானை நமக்குக் கண்ணுக்கு நேரே காட்டுகிறது. அதனால் வேதம் போன்றது என்ற கருத்தும் சொல்வர்; இதனை ஸ்ரீதேசிகன், “கண்ணன் அடியினை எமக்குக் காட்டும் வெற்பு” என்று சாதிக்கிறார்.

**கே: சுப்ரபாதம் என்பது என்ன? சுப்ரபாதம் பாடுவதற்கு காரணம் என்ன?**

ப : “சுப்ரபாதம்” என்றால் “நல்ல காலை” என்று பொருள்படும். “ஸு” என்றால் “நல்ல” என்று பொருள். “ப்ரபாதம்” என்றால் விடியற்காலை; இதைத்தான் ஆங்கிலத்தில் குட்மார்னிங் என்று சொல்கிறார்கள்.

காலை கண் விழிக்கும் போதே நல்ல சுபமான காலை நேரமாக இருப்பதையே சுப்ரபாதம் என்கிறோம்; அதனால் அந்த நாள் முழுதும் நல்ல சுபமான நாளாக இருக்கும் என்று எதிர் பார்க்கிறோம்.

அரசர்களை எழுப்பும்போது, மங்கலமான நாதங்கள் முழங்க, மங்கலமான பொருட்களை ஏந்தி, சுப்ரபாதம் பாடி எழுப்புவர்; பெருமானையும் அரசனைப் போல் கருதி மரியாதையுடன் உபசாரங்கள் செய்ய வேண்டும்; ஆகையால், பெருமானுக்கு சுப்ரபாதம் பாடி எழுப்புவதும் உபசாரமாக ஆகும். வேதங்களே பாடி எழுப்புகின்றன என்று ஸ்ரீதேசிகன் யாதவாப்யுதய காவ்யத்தில் சுப்ரபாத சர்க்கத்தில் சாதிக்கிறார்.

சுப்ரபாத சேவை விசேஷமானது; மங்கலமாக எழுப்பப்படும் பெருமான் நம்மை காலையில் முதன்முதலில் மங்கல கடாக்ஷம் செய்து அருளுவான் என்றும் ஸ்ரீதேசிகன் சாதிக்கிறார்.

ஸ்ரீதேசிகன் அருளிய சுப்ரபாத சர்க்கத்தைப் பின்பற்றி அதே முறையில் சுப்ரபாத ஸ்தோத்ரத்தை மஹான்கன் இயற்றி வருகின்றனர்.

**திருமலையப்பனை “பாலாஜி” என்று சொல்லக் காரணம் என்ன?**

ப : திருவேங்கடவன், ஏழுமலையான், வேங்கடராமர், ஸ்ரீநிவாசர், கோவிந்தன் எனப் பல பெயர்களில் திருமலையப்ப ஸ்வாமியை அன்புடன் பலவாறு அழைத்து மகிழ்கிறோம். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை கண்ணன் என்று தீந்தமிழில் சொல்கிறோம். அவன்தான் திருமலை அப்பனாகத் தோன்றினான் என்று புராணங்களும் கூறுகின்றன;

“கண்ணன் அடியினை எமக்குக் காட்டும் வெற்பு” என்று ஸ்ரீதேசிகன் இதனைப் பாடி அருளினார். குழந்தைக் கண்ணனை செல்லமாக “பாலா” என்று அழைப்பார்கள். அதே பெயரை வைத்து திருமலையப்பனை அழைக்கிறோம். மரியாதைக்காக “ஜி” என்பதையும் சேர்த்து பாலாஜி என்று அழைக்கிறோம்; இது அன்பும், மரியாதையும் வெளிப்படுத்தும் திருநாமம் என்று சொல்லலாம்.

–நாவல்பாக்கம்ஸ்ரீஉ.வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி,
திருவனந்தபுரம்

நீதிக்கதை

ஆழ்வார்கள் பன்னிருவருள் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூன்று ஆழ்வார்களையும் முதலாழ்வார்கள் என்பர். இவர்கள் வைணவ பக்தி இயக்கத்திற்கு முன்னோடிகள் ஆவர். ஞானமும், பூலோக மக்களிடம் தத்துவ ஞானம் விளைவிக்கும் ஆற்றலும் உடையவர்கள்.

*''எழுவார்... தூண்டும் மலை''* எனும் பாசுரத்தில் திருவேங்கட மலையே நித்திய சூரிகளுடைய மனமாகிய விளக்கை தூண்டி ஒளிரச் செய்யும் மலையாகும் என்றும், *''ஊரும்... மாலதிடம்.''* எனும் பாசுரத்தில் குறவர் பட்டிமேயும் யானைகளைத் துரத்த மாணிக்கக்கட்டியை எறிவர். அங்கு திரியும் மலைப் பாம்புகள் யானையை மேகமாகவும், மாணிக்கத்தை மின்னலாகவும் நினைத்து இனி இடி உண்டாகும் என்று அஞ்சி புற்றினுள்ளே புகும். இப்படிப்பட்ட வளம் கொழிக்கும் மலை திருமலை என்று பொய்கையாழ்வார் பாடியுள்ளார்.

பூதத்தாழ்வார் *''நின்றதுவும் வேயோங்கு தண் சாரல் வேங்கடமே''*எனும் பாசுரத்தில் மூங்கில்கள் ஓங்கி வளர்ந்துள்ள குளிர்ந்த சாரலை உடையது திருமலை. மிக்க அழகான சோலைகளை உடையது என்றும்,*''நெறியார்... விரும்பும் வெற்பு.''* எனும் பாசுரத்தில் மலைகளில் பூக்கொடிகள் படர்ந்து பூத்துக் குலுங்குவதை பார்த்த ஆழ்வார், இது மலையா அல்லது பூங்குவியலா என வியக்கிறார். அந்த இயற்கை எழிலில் மனதை பறிகொடுத்து, தான் விரும்பும் மலை வேங்கடமே என்று பாசுரமிடுகிறார்.

*''புகுமதத்தால்... வணங்கும் களிறு''*, *''களிறு முகில்... குன்று''* எனும் பாசுரங்களின் வாயிலாக இயற்கை எழில் மிகுந்த திருமலையில் உள்ள யானைகளை பற்றியும், யானைகள் திருவேங்கடவனை வழிபடுவதையும், மேலும், யானையானது மலைமுகட் டில் படிந்திருந்த மேகத்தை எதிரியானதொரு யானை என்று மயங்கிப் பெரிய வேகத்தோடு சென்று துதிக்கையினால் அம்மேகத்தை குத்தி, அதனால் ஏற்பட்ட சினம் தணியாது அங்கேயே நின்று பெரும் முழக்கம் செய்யப்பெற்றது திருவேங்கடமே என்கிறார்.



முதலாழ்வார்கள் தம் அருளிச்செயலில் திருமலையின் இயற்கை பேரெழிலை சொற்சித்திரங்களாய் அருளியுள்ளனர். இவற்றை கற்பனைகளாய் மட்டுமே கருதாது அதன் கலை நயத்தையும் கவிநயத்தையும் உள்ளம் கொண்டு அறிவோம். அதே போன்று அப்பாசுரங்களில் பொதிந்துள்ள தத்துவக் கருத்துக்களையும் தெய்வீகம் தவழ்ந்து பொலியும் தன்மையையும் கண்டுகளிக்கலாம்.

குழந்தைகளே! முதலாழ்வார்கள் திருமலையின் இயற்கை எழில் குறித்து புகழ்ந்து பாடுகையிலே இயற்கையின் சிறப்பை அறிதல் வேண்டும். அத்தகைய இயற்கை எழிலை நாமும் போற்றி, பாதுகாத்து அதனை மேம்படுத்தும் விதத்தில் மரத்தை நடுவதை நம் வழக்காகக் கொள்ளல் வேண்டும்.



# முதலாழ்வார்கள் காட்டும் வழிகாட்டுதல்

– திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,
அம்பத்தூர்.

**பல்சுவைப் பகுதி**

**சித்திரப் பகுதி**

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



படத்தைப் பாருங்கள்



வண்ணம் தீட்டுங்கள்






### படத்தோடு ஏற்புடைய சொல்லை இணைக்க...



1. கல்ப விருக்ஷம்
2. அன்னப்பறவை
3. முத்துப்பந்தல்
4. சர்வ பூபாலம்
5. யானை
6. கருடன்
7. குதிரை
8. அனுமன்



### எந்த ஸ்வாமிக்கு எந்த வாகனம்

துர்கா தேவி
சிவபெருமான்
கஜாலக்ஷ்மி
கணபதி
முருகன்
சரஸ்வதி

### வார்த்தைகளைச் சரியாக எழுதி ஆத்திசூடியைப் படிப்போமா!

எழுத்து கை விடேல் ஏற்பது எண் இகழேல் ஊக்கமது இகழ்ச்சி

ஊக்கமது கை விடேல்,எண் எழுத்து இகழேல்,ஏற்பது இகழ்ச்சி


### பாதையைக் கண்டுபிடி



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 3 | 3 | 6 | 7 |
| | | ↓ | 1 | 2 | 7 | 9 |
| 3 | 2 | 1 | 5 | 6 | 5 | 7 |
| 4 | 8 | 3 | 11 | 10 | 9 | 8 |
| 5 | 6 | 7 | 10 | 11 | 12 | 18 |
| 8 | 3 | 8 | 14 | 17 | 13 | 19 |
| 14 | 7 | 9 | 11 | 13 | 14 | 17 |
| 18 | 11 | 10 | 15 | 16 | | |
| 13 | 12 | 13 | 14 | ↓ | | |

ஸ்ரீதுர்கா தேவி நவராத்திரியில் அசுரனை அழித்தாள். அந்த மஹா சக்தி அசுரனை அழிக்க வந்த பாதையை 1,2,3 என்று 16 வரை வண்ணமிட்டு காட்டுங்கள்.





### மாநிலத்தைக் கண்டுபிடி

ஹௌரா பாலம் அமைந்த இந்த மாநிலத்தில் காளி, துர்கா பூஜை நவராத்திரியில் நடைபெறும்.

...............

மேற்கு வங்காளம்

வினாடி வினா

### திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-15

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. ஆழ்வாரால் பறவையேறு பரம்புருடா எனக் குறிப்பிடப்பட்டவர்.......................................................
2. மண் வட்டிலில் உணவருந்தும் பரம்பொருள் ......................................................................................
3. வந்தாய் என் மனம் புகுந்தாய் எனப் பாசுரமிட்டவர் ..................................................................
4. மண்ணை தன் தாளால் அளந்த பெருமான் ..........................................................................................
5. தயாசதகத்தை இயற்றிய ஆசார்யர் .....................................................................................................
6. திருமலையில் அன்றாட வரவு செலவு கணக்கை ஏற்கும் பெருமான்.............................................
7. திருவேங்கடத்து அந்தாதியைப் பாடியவர் ........................................................................................
8. ஸ்ரீநிவாசனுக்கு முத்து மாலையை வழங்கிய பக்தை ...............................................................
9. கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசியின் பெயர் ...................................................................
10. பக்தர்கள் ஆனந்த பரவசம் அடைவதால் திருமலை .......................................................................
11. பாம்பின் வடிவில் திகழ்வதால் திருமலை ..........................................................................................
12. திருவேங்கடவனுக்கு தீர்த்த கைங்கர்யம் செய்தவர் .....................................................................
13. திருமலையில் புதன் கிழமைதோறும் நடைபெறும் சேவை ...........................................................
14. வரகூர் திருத்தலத்தில் வீற்றிருக்கும் திருமால் ...........................................................................
15. திருமலையில் பக்தர்களுக்கான குடிநீர் திட்டத்தின் பெயர் ........................................................

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.10.2023.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

# இதில் பொருந்தாதது ஏது?



குறிப்பு : மஹாலக்ஷ்மி தாயார், சரஸ்வதி தேவி, நவராத்ரி, துர்கா தேவி இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்




1) தீபம்
2) புத்தகம்
3) ஓலைச்சுவடி
4) குத்துவிளக்கு
5) எழுத்தாணி
6) மை கிண்ணம், மயிலறகு
7) தோரணம்

# தண்ணீர் தானே என நினைக்காதே!

சித்திரக் கதை

கதை மூலம்:
டாக்டர் கே. ரவிச்சந்திரன்.
சித்திரம்:
திரு. டி. சிவாஜி.




முனிவரே எத்தனை தானம் செய்தாலும் நற்பலன் கிட்டவில்லை. மூன்று முறை சாதகப் பறவை வடிவினையும், ஒரு பிறவியில் கழுகு வடிவினையும், ஏழு பிறவிகளில் நாய் வடிவினையும் பெற்று தற்போது இவ்வடிவில் உள்ளேன். என்னைக் காப்பாற்றுங்கள்.
ஓ அரசனே! ஸ்ரீவேங்கடாசலத்தில் நீ தண்ணீர் தானம் செய்ய வில்லை. தண்ணீர் மேன்மையானதல்ல என எண்ணி பக்தர்களுக்கு அளிக்கவில்லை. ஆதலால் தான் உனக்கு இந்நிலை.
முனிகளே! இதற்கு விமோசனமே இல்லையா?
ஸ்ரீவேங்கடாசலத்தில் நான் செய்த புண்ணியங்களை உன் பாவ நிவர்த்திக்காக தாரை வார்க்கின்றேன். அதனால் உன் ப்ராராப்த கர்மாக்கள் தொலைந்து விடும்.
முனிவரின் அருளால் அரசனின் சகல பாவங்களுக்கும் நிவாரணம் கிட்டியது.
முனிவரே! தங்களால் என் பாவங்கள் எல்லாம் தொலைந்தன. ஸ்ரீவேங்கடாசலத்தில் தண்ணீரை தானம் செய்வதினால் விஷ்ணு லோகம் கிடைக்கும் என்பதனை என் வாழ்வின் மூலம் வருங்காலத்தினரும் அறிய வேண்டும் என அருள் புரிந்திடுங்கள்.
அப்படியே ஆகட்டும். நீ மட்டுமல்ல வேங்கடாசலத்தில் தம் தம் சக்திக்கு ஏற்றார்போல் தண்ணீர் தானம் செய்வது அனைவரது கடமை.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
(பெரிய எழுத்துக்களில்) _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐தமிழ் ☐கன்னடம் ☐ இந்தி ☐ஆங்கிலம் ☐சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ரூ.2,400/-(12 வருடங்கள்)

4.சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

25-08-2023 அன்று திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் நடைபெற்ற ஸ்ரீவரலக்ஷ்மி விரதம். அன்றைய தினம் நடைபெற்ற தங்கத்திருத்தேர் உத்ஸவம். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பூமண கருணாகர ரெட்டி அவர்கள் மற்றும்தி.தி.தே.இணைச் செயலாட்சித்தலைவர் (எச்.&இ) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்.









15-08-2023 அன்று திருப்பதியில் தி.தி.தே நிர்வாகக் கட்டட வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியை ஏற்றி அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பூமண கருணாகர ரெட்டி அவர்கள். அருகில் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்.









SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-09-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.



தாயார் நவராத்திரி உத்ஸவம்
2023, அக்டோபர் 15 முதல் 23 வரை